வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 15.12.2021 புதன்கிழமை | இதழ் : 10 | பக்கங்கள் : 16







# யாழ். மாநகர சபை பட்ஜெட் இன்று! த. தே. கூட்டமைப்பு எதிர்க்க முடிவு!!

## ஆதரவளிப்பதில் ஈ. பி. டி. பிக்குள் இழுபறி

யாழ்ப்பாணம், டிசெ. 15

யாழ்ப்பாணம் மாநகர சபையின் வரவு - செலவு திட்டத்துக்கு ஆதரவளிப்பதில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாநகர சபை உறுப்பினர்கள் முடிவு எடுத்துள்ளனர்.

இதேநேரம், ஈ. பி. டி. பி. கட்சிக்குள் இந்த விடயம் குறித்து இழுபறி நிலை காணப்படுவதாக விடயமறிந்த வட்டாரங்கள் 'ஈழநாடு'வுக்கு தெரிவித்தன.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் வரவு - செலவுத் திட்டம் இன்று செவ்வாய்க்கிழமை காலை முதல்வர் மணிவண்ணனால் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்நிலையில், 45 உறுப்பினர்களை கொண்ட யாழ். மாநகர

15

## சுமந்திரன் - சாணக்கியன் எம்.பிக்களின்

# பசப்பு வார்த்தைகளை நம்பி மக்கள் ஏமாந்து விடக்கூடாது



## இப்படிச் சொல்கின்றார் கஜேந்திரன்

அம்பாறை, டிசெம்பர் 15

"சிங்கள மயமாக்கத்தையோ - பௌத்த மயமாக்கத்தையோ தடுக்க முடியாத சாணக்கியன் எம்.பி., மக்களை ஏமாற்றுவதற்காக வடக்கு - கிழக்கு இணைந்த முதலமைச்சர் என்ற விடயத்தைத் தொடர்ந்து தெரிவித்து வருகின்றார். சுமந்திரன், சாணக்கியன் எம்.பிக்களின் இப்படியான பசப்பு வார்த்தைகளை நம்பி மக்கள் ஏமாந்துவிடக்கூடாது என்று கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்."

- இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

15

## கொரோனாவுக்கு 20 பேர் பலி

கொழும்பு, டிசெ. 15

கொரோனா தொற்றால் நாட்டில் நேற்று முன்தினம் 20 பேர் உயிரிழந்தனர் என்று அரசாங்க தகவல் திணைக்களம் நேற்று தெரிவித்தது.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் 30 வயதுக்கு உட்பட்டவர்களில் ஆண் ஒருவரும், பெண் ஒருவருமாக இருவரும், 30 தொடக்

15

## வேலையின்மை வடக்கில் உச்சம்!

கொழும்பு, டிசெ. 15

இந்நிலையில், வடக்கு மாகாணத்தில் தொழில் வாய்ப்பின்மை பிரச்னை மேலும் உக்கிரமடைந்துள்ளது. ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகள் தொழில்வாய்ப்புகளை எதிர்பார்த்துள்ளனர் என்று தெரிய வருகின்றது.

இலங்கையில் 25 மற்றும் 29 வயதிற்குட்பட்டவர்களில் 9.2 வீதமானவர்கள் தொழில் வாய்ப்பின்றி இருக்கின்றனர் என்று

15

## பங்காளிகளின் கருத்துக்களுக்கு அரசாங்கத்துக்குள் மதிப்பில்லை!

### திஸ்ஸ விதாரண எம். பி. கவலை

கொழும்பு, டிசெ. 15

அரசாங்கத்துடன் 11 பங்காளி கட்சிகள் கூட்டணியாக ஒன்றிணைந்துள்ளோம். இருப்பினும் எமது கருத்துக்களுக்கு அரசாங்கத்தில் மதிப்பதில்லை.

பங்காளி கட்சியின் தலைவர்களுக்கு முக்கிய பேச்சு

15

## வடக்கு அபிவிருத்தி கூட்டம்:

# தமிழ் மொழிக்கு இடமில்லாததால் வெளியேறினார் சிறீதரன் எம். பி.!

யாழ்ப்பாணம், டிசெ. 15

ஆளுநர் ஜீவன் தியாகராசா தலைமையில் நடைபெற்ற வடக்கு மாகாண அபிவிருத்திக் குழுக் கூட்டம் ஆங்கிலம், சிங்களத்தில் மட்டுமே இடம்பெற்றது.

தமிழ் மொழி பெயர்ப்பு செய்யாதமையால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்

15

## சுமந்திரனின் நிலைப்பாட்டுக்கே தமிழ் பேசும் கட்சிகள் வந்துள்ளன!

### கஜேந்திரகுமார் எம். பி.

யாழ்ப்பாணம், டிசெ. 15

"13 வருடங்களாக 13ஆவது திருத்தம் ஓர் ஆரம்பப் புள்ளி அதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சுமந்திரன் கூறிவந்தார். ஆனால், அவர் தற்போது அந்த நிலையை விட்டு வந்த பின்னர்

15

## மாவீரர் நாள் பதிவிட்டவருக்கு ஓர் ஆண்டின் பின்னர் பிணை!

திருகோணமலை, டிசெ. 15

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டிருந்த இளைஞனுக்கு, ஒரு வருடத்திற்குப் பின்னர், திருகோணமலை மேல் நீதிமன்றம் நேற்று பிணை வழங்கியுள்ளது.

மூதூர் - சம்பூர் 2ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த

15

## ம. உ. ஆணைக்குழுவுக்கு புதிய தலைவர் நியமனம்!

கொழும்பு, 15

மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு புதிய தலைவரையும், உறுப்பினர் ஒருவரையும் ஜனாதிபதி நியமித்துள்ளார்.

இதன்படி, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் புதிய தலைவராக ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் ரோஹினி மார

15






உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# இப்படியும் நடக்கிறது...!

மஹாபாரதப் போர் நடந்து கொண்டிருந்தது. ஒரு வீரன் போர்க் களத்திற்குள் வந்து கொண்டிருந்ததை கிருஷ்ணர் கவனித்தார். அவனுடைய நேர் பார்வையும், நிமிர்த்திய நெஞ்சும், வீர நடையும் கிருஷ்ணரை ஈர்த்தது. தன் உருவை மாற்றிக் கொண்டு அவனை அணுகி "வீரனே எங்கு வந்தாய்?" என்று கேட்டார். "நான் போரில் பங்கேற்க வந்தேன்!" என்றான் அவன். 'உனக்கு என்னப்பா தகுதியிருக்கிறது" என்றார் கிருஷ்ணர். அவன் தன்னிடம் இருக்கும் வில்லையும் மூன்று அம்புகளையும் காட்டி, 'இதில் ஒன்றால் பாண்டவர்களையும், மற்றொன்றால் கௌரவர்களையும், மூன்றாவதால் அந்தக் கிருஷ்ணனையும் கொல்லும் திறமை படைத்தவன் நான்" என்றான்.

"எப்படி உன்னை நம்புவது?" என்றார் கிருஷ்ணர். அவன் அவரை மேலும் கீழும் பார்த்து விட்டு தூரத்தில் உள்ள மரத்தைக் காட்டி, அதில் இருக்கும் இலைகள் அனைத்தையும் ஒரே அம்பில் வீழ்த்திக் காட்டுவதாகக் கூறினான். விளையாடிப் பார்த்து விடுவது என்று முடிவு செய்த கிருஷ்ணர், "சரி செய் பார்க்கலாம்" என்றார்.

அவர் கடவுளல்லவா? அவனுக்குத் தெரியாமல் மரத்தின் ஐந்து இலைகளை முதலில் தன் காலடியின் கீழே மறைத்துக் கொண்டார்.

வீரன் நாண் ஏற்றி அம்பை எய்தான். அவன் சொன்னது போலவே மரத்தில் அனைத்து இலைகளும் ஒரே அம்பின் தாக்குதலில் கீழே விழுந்து விட்டன. அதோடில்லாமல் அம்பு திரும்பவும் வந்து ஐந்து முறை கிருஷ்ணரின் காலைத் துளைத்தது.

வீரன் கிருஷ்ணரைத் தெரிந்து கொண்டு வணங்கினான். கிருஷ்ணரும் அவனது திறமையைப் பாராட்டினார், 'சரி, யாருக்காக போராடப் போவதாக உத்தேசம்?" என்று கிருஷ்ணர் கேட்டார். வீரன் 'என் திறமைக்கு சவாலாக நான் எப்போதுமே தோற்கும் கட்சிக்கு ஆதரவாகவே போரிடுவேன்" என்றான். 'இவன் போரிட்டால் இவன் பக்கம் உள்ள கட்சி ஜெயிக்க ஆரம்பிக்கும், உடனே இவன் எதிர் கட்சிக்குப் போய் விடுவான். பிறகு அது ஜெயிக்க ஆரம்பிக்கும். இது முடியவே முடியாதே. போருக்கு ஒரு முடிவு ஏற்படாமல் போய் விடுமே" என்று கிருஷ்ணர் யோசித்தார்.

இந்தக் கதைதான் எனக்கு ஞாபகத்திற்கு வருகின்றது.

நண்பர் ஒருவரின் குடும்ப வைபவம் ஒன்றிற்கு சென்றிருந்தேன்.

அங்கு யாழ். மாநகர சபை உறுப்பினர் ஒருவரை சந்திக்க முடிந்தது. எதிரணியிலுள்ள கட்சி ஒன்றில் வென்றுவந்த உறுப்பினர் அவர். அவர் நாம் அமர்ந்திருந்த இடத்தில் வந்து அமர்ந்துகொண்டார். எங்களுடன் சில உதைபந்தாட்ட முன்னாள் வீரர்களும் இருந்தனர். அவரைக் கண்டதும், 'நீங்கள் ஏன் (முன்னாள்) மேயர் ஆனல்ட்டின் பட்ஜெட்டை தோற்கடித்தீர்கள்' என்று கேட்டேன்.

ஏனெனில், ஆனல்ட் தயாரித்திருந்த பட்ஜெட், முழுக்க முழுக்க உறுப்பினர்கள் சமர்ப்பித்த யோசனைகளைக் கொண்டுதான் தயாரிக்கப்பட்டிருந்தது என்று முன்னரே அறிந்திருந்தேன்.

அதனால் இந்தக் கேள்வியை பலரிடம் கேட்கவேண்டும் என்று நீண்ட நாட்களாகவே நினைத்திருந்தேன்.

அவர் சர்வ சாதாரணமாக பதில் தந்தார்.

"அது வேற ஒண்டுமில்லை அண்ணே, எல்லாம் அரசியல்தான்", என்றார். அது தெரிந்ததுதானே. மாநகர சபையில் மக்கள் ஆட்சி நடக்கிறது என்றால் அது அரசியல் என்பது தெரிந்ததுதான். ஆனால், உறுப்பினர்கள் தத்தமது வட்டார தேவைகளை நிறைவேற்ற விரும்பி, சமர்ப்பித்த யோசனைகளையே உள்வாங்கி தயாரிக்கப்பட்ட பட்ஜெட்டை அந்த உறுப்பினர்களே எதிர்ப்பது என்ன அரசியல் என்று விளக்கம் கேட்டேன்.

அவர் சிரித்துக்கொண்டே சொன்னார், 'மக்கள் தேவைகளை நிறைவேற்றுவது அரசியல் இல்லை அண்ணே, எங்கட தனிப்பட்ட அரசியல் நலன்தான் அரசியல்", என்று விளக்கம் தந்தார்.

'ஆனல்ட் சில நல்ல வேலைகளைச் செய்து வளரத் தொடங்கினார். அவரின் வளர்ச்சி எங்கட வாக்குவங்கியிலையே கையை வைக்குமெண்டால் விடமுடியுமோ?", என்று அவர் கேள்வி எழுப்பியபோதுதான் இந்த பாழாய்போன அரசியல் பற்றியே எனக்கு தெரியவந்தது.

உடனே திரும்பக் கேட்டேன், இப்பயும் மேயர் மணிவண்ணன், உங்கட யோசனைகளைத்தான் புதிய பட்ஜெட்டில் சேர்த்திருப்பதால் அதனை நிறைவேற்ற முடியும் என்று நம்பிக்கை தெரிவித்திருக்கிறரே, அதையும் உங்கட அரசியல் தோற்கடிக்குமா? என்று.

அவர் சிரித்துக்கொண்டே சொன்னார், 'அவர் எங்கட வாக்குவங்கியிலை கைவைப்பார் எண்டு தெரிஞ்சால் அதையும் தோற்கடிக்கத்தானே வேணும்"

மகாபாரத்திதல் அந்த வீரன் தோற்கின்ற பக்கம் நின்று அவர்களின் தோல்வியைத் தடுப்பேன் என்றான். ஆனால், நம்மவர்களோ, வெல்கிறவர்களை தோற்கடிக்க விரும்புகின்றனர்.

இன்று மேயர் மணிவண்ணன் தனது பட்ஜெட்டை சமர்ப்பித்து பலப்பரீட்சை நடத்துகிறார் என்ன நடக்கிறது என்று பார்ப்போம்.!

**- ஊர்க்குருவி**

# பேரா. நாகேஸ்வரன் காலமானார்



யாழ்ப்பாணம், டிசெ. 15,

சபரகமுவ பல்கலைக்கழக ஓய்வு நிலை பேராசிரியர் வாகீசகலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் நேற்று கொழும்பில் காலமானார்.

நயினை நாகபூஷணி அம்பாளின் பரம்பரை அறங்காவலரான அவர், ஈழத்தின் தலைசிறந்த தமிழ்ப் புலமையும், ஆன்மிக வளமும் கொண்ட ஒருவர்.

தொண்ணூறுகளில் கோயில் திருவிழா மேடைகளில் இவரின் ஆன்மிக உரைகள் இடம்பெற்றன.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும் என குடும்பத்தினர் தெரிவித்தனர்.

# மக்கள் சந்திப்பில் சிறீதரன் எம். பி.

கிளிநொச்சி, டிசெ. 15

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் வலைப்பாடு, கிராஞ்சி, பொன்னாவெளி, வேரவில் ஆகிய கிராமங்களின் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், மக்களை நேற்று முன்தினம் சந்தித்தார்.

வேரவில் பொது நோக்கு மண்டபத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றது. இதன்போது, வேலை ஆரம்பித்து தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள பல்லவராயன் கட்டுச் சந்தி தொடக்கம் கிராஞ்சி, வேரவில், வலைப்பாடு, பொன்னாவெளி ஆகிய கிராமங்களுக்கு செல்லும் பிரதான வீதி தொடர்பிலும் சமகால அரசியல் நிலவரம் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. (ஐ)

# சம்பிக்கவின் கடவுச்சீட்டு விடுவிப்பு

கொழும்பு, டிசெ. 15

முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவின் நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ள கடவுச்சீட்டை வீஸா பெறுவதற்காக தற்காலிகமாக விடுவிக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தமித் தொட்டவத்த முன்னிலையில் நேற்று மனுவொன்றை தாக்கல் செய்த பாட்டலி சம்பிக்க ரணவக்கவின் சட்டத்தரணிகள், தனது கட்சிக்காரர் பெப்ரவரி மாதம் வெளிநாடு செல்ல உள்ளதாகவும், தற்போது நீதிமன்ற காவலில் உள்ள அவரது கடவுச்சீட்டை தற்காலிகமாக விடுவிக்குமாறும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்த கோரிக்கையை ஏற்றுக் கொண்ட நீதிபதி, குறித்த கடவுச்சீட்டை தற்காலிகமாக விடுவிக்குமாறு உத்தரவிட்டார்.

2016 ஆம் ஆண்டு ராஜகிரிய பகுதியில் ஏற்பட்ட விபத்தில் இளைஞன் ஒருவனை பலத்த காயமடையச் செய்த குற்றச்சாட்டு தொடர்பில் முன்னாள் அமைச்சர் பாட்டாலி சம்பிக்க ரணவக்கவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் பிணை வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அவரது கடவுசீட்டை நீதிமன்ற காவலில் வைக்க உத்தரவிடப்பட்டிருந்தது. (அ)

## கல்வி tv CHANNEL-1

**15.12.2021**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

## கல்வி tv CHANNEL - 2

**15.12.2021**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
15.12.2021 புதன்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 29

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

editor@eelanadu.lk, eelanaduweekly@gmail.com, news@eelanadu.lk
021 730 1370

# பாலசிங்கத்தின் 2006 நகர்வு?

விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியராக அறியப்பட்ட, அன்ரன் பாலசிங்கம் காலஞ்சென்று நேற்றுடன் 15 வருடங்களாகி விட்டன. 14, டிசெம்பர், 2006 இல் பாலசிங்கம் காலமானார். தமிழரின் ஆயுத விடுதலைப் போராட்டத்தில் புத்திஜீவித்துவ பங்களிப்பு! - இப்படியொரு சிந்தனை ஏற்படும் போதெல்லாம், உடன் நினைவுக்கு வரும் ஒருவராக பாலசிங்கமே இருக்கின்றார். தமிழர் அரசியல் ஆயுத விடுதலைப் போராட்டமாக பரிணமித்தபோது, புலமைத்துவ நிலையில் பலர் பங்களித்திருக்கின்றனர். பலர் புத்திஜீவிகளாக அடையாளம் காணப்பட்டிருந்தனர். ஆனால், இவர்களில் பாலசிங்கம் ஒருவரே அதிகம் தனித்துத் தெரியும் ஒருவராக இருந்தார். இதற்கு அவர் விடுலைப் புலிகளின் மதியுரைஞராக இருந்தது மட்டும் ஒரு காரணமல்ல. அவரின் தனிப்பட்ட ஆளுமையும் இதற்கான பிரதான காரணமாகும். அவரை பலருக்கு பிடித்தும், சிலருக்கு பிடிக்காமலும் இருந்தது. விடுதலைப் புலிகளை ஏற்றுக்கொள்ளாதவர்களால் பாலசிங்கத்தை ஏற்றுக்கொள்ள முடியாமல் இருப்பதில் ஆச்சரியப்பட ஏதுமில்லை. சர்வதேச அரசியல் விவகாரங்களில் அவரிடம் பரந்த அறிவு இருந்தது. நெருக்கடியான காலகட்டங்களில் விடுதலைப் புலிகள் இயக்கத்தை காப்பாற்றும் ஒருவராக அவர் இருந்திருக்கின்றார்.

இந்தியாவை நோக்கி கோரிக்கை ஒன்றை முன்வைப்பது தொடர்பில், தமிழ் கட்சிகள் தீவிரம் காண்பித்து வருகின்ற அதேவேளை, அதனை குழப்பும் வகையிலும் சில முயற்சிகள் இடம்பெற்றுவரும் நிலையில் - பாலசிங்கத்தை நினைத்துக்கொள்வது கூடுதல் முக்கியத்துவம் பெறுகின்றது. விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இலங்கை படைகளுக்கும் இடையில் மீளவும் யுத்தம் ஏற்பட்ட நிலையில், பாலசிங்கம் கலக்கமடைந்திருந்தார். முழு உலகும் விடுதலைப் புலிகளுக்கு எதிராகத் திரும்பலாம் என்பதை அவர் மிகவும் சரியாகவே கணித்திருத்தார். அவர் எதிர்பார்த்தது போன்றே விடயங்கள் அனைத்தும் இறுதியில் நடந்து முடிந்தன.

இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் - பாலசிங்கம், 2006 ஜூனில், என். டி. ரி. வி என்னும் இந்திய தொலைகாட்சி சேவைக்கு நேர்காணல் ஒன்றை வழங்கியிருந்தார். இதன்மூலம் புதுடில்லியை நோக்கி ஒரு நகர்வை மேற்கொண்டிருந்தார். விடுதலைப் புலிகளுக்கு எதிராக முழு உலகும் திரும்பலாம் என்னும் இக்கட்டானதொரு சூழலில்தான், பாலசிங்கம் இந்த நகர்வை மேற்கொண்டிருந்தார். இந்திய படைகளுக்கு எதிராக இரண்டு வருடங்கள் விடுதலைப் புலிகள் கெரில்லா போரொன்றில் ஈடுபட்டதையும் - அதனைத் தொடர்ந்து இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து இந்திய படைகளை வெளியேற்றுவதில் இணக்கப்பாட்டுக்கு வந்ததையும் - அதன் தொடர்சியாக ராஜீவ் காந்தி கொலை இடம்பெற்றதையும் சுட்டிக் காட்டிய, பாலசிங்கம், அது தொடர்பில் தாம் (விடுதலைப் புலிகள் அமைப்பு) ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்திருந்தார். அத்துடன், குறித்த சம்பவத்தை, வரலாற்றில் நிலைக்கத்தக்க ஒரு துன்பியல் சம்பவம் என்றும் பாலா வர்ணித்திருந்தார்.

இந்திய அரசாங்கமும், இந்திய மக்களும் பெருந்தன்மையுடன் கடந்த காலத்தில் இடம்பெற்ற அந்த சம்பவத்தை பின்னுக்கு வைத்துவிட்டு, புதிய அணுகுமுறையுடன் தமிழர் பிரச்னையை அணுக வேண்டுமென்றும் பாலசிங்கம் மன்றாட்டமாக வேண்டுகோள் விடுத்திருந்தார். அன்றைய சூழலில் பாலசிங்கம் மேற்கொண்ட நகர்வு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். ஏனெனில், இந்தியாவால் மட்டுமே இந்த யுத்தத்தின் திசைவழியை மாற்றியமைக்க முடியுமென்று, பாலசிங்கம் மிகவும் சரியாகவே கணித்திருந்தார். ஆனால், விடயங்களை, எதிர்பார்த்தது போன்று அவரால் முன்கொண்டு செல்ல முடியாமல் போய்விட்டது.

இவ்வாறானதொரு சூழலில்தான் 2006 டிசெம்பரில் அவர் காலமானார். பாலசிங்கம் காலமாகி, மூன்று வருடங்களில், அவர் கணித்தது போன்றே முழு உலகும் விடுதலைப் புலிகளுக்கு எதிராகத் திரும்பியது. விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டனர். தூரத்திலிருப்பவர் என்னதான் வல்லமை பொருந்தியவராக இருந்தாலும்கூட, கூப்பிட்ட குரலுக்கு ஓடிவரக் கூடியவர் அருகில் இருப்பவர்தான். இந்த உண்மையை உணர்ந்து கொண்டுதான் தமிழர் தரப்புக்கள் தங்களின் அரசியல் நகர்வுகளை மேற்கொள்ளவேண்டும். இது விருப்பு வெறுப்புக்கள் சம்பந்தப்பட்ட விடயமல்ல. இது ஓர் அரசியல் நிர்ப்பந்தம். நிர்ப்பந்தங்களை ஒருவேளை நம்மால் ரசிக்க முடியாமல் இருக்கலாம். ஆனால், தவிர்க்க முடியாது. இந்த நிர்ப்பந்தத்தை துல்லியமாக விளங்கிக் கொண்ட ஒருவராக பாலசிங்கம் இருந்திருக்கின்றார்.

# அரச தரப்பின் எதேச்சையான போக்கு!

-அலசுவது இராஜதந்திரி-



இலங்கையின் சிரேஷ்ட இடதுசாரி அரசியல்வாதிகளில் ஒருவரும் ஆளுங் கட்சி பாராளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண, பாராளுமன்ற கூட்டத் தொடரை ஜனாதிபதி ஒத்திவைத்தமைக்குப் பின்னால் ஏதாவது மறைமுக காரணம் இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இன்றுள்ள அரசியல்வாதிகளில் நேர்த்தியாக சிந்திக்கத் தெரிந்தவரும் காலஞ்சென்ற நிதி அமைச்சர் கலாநிதி என். எம். பெரேராவின் மருமகனுமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண, ஒரு முதிர்ந்த மார்க்ஸிய கல்விமானாகவும் இருக்கின்றார்.

அரச தரப்பில் எப்போதுமே மிகவும் கருத்தாழம்மிக்க கருத்துக்களையே கூறிவருகின்ற பேராசிரியர் திஸ்ஸ விதாரண, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஒருபோதும் எந்தவொரு விடயம் குறித்தும் ஆளுந்தரப்பிலுள்ள முக்கிய உறுப்பினர்களுடன் கலந்துரையாடுவதில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

அரச தலைவரின் இத்தகைய எதேச்சையான போக்குக் காரணமாகவே பல்வேறு முக்கிய விடயங்கள் சிக்கலடைந்துள்ளன எனவும் பேராசிரியர் திஸ்ஸ விதாரண குறிப்பிட்டுள்ளார்.

மூத்த அரசியல்வாதியும் கல்விமானுமான பேராசிரியர் திஸ்ஸ விதாரணவின் இக்கருத்து, ஓரிரு தினங்களுக்கு முன்னர் முன்னாள் இராணுவத்தளபதி ஜெனரல் தயா ரத்நாயக்க, இராணுவப் பின்னணியைக் கொண்டோரால் ஒரு ஜனநாயக நாட்டை நிர்வகிக்க முடியாது என்று கூறியதை நிரூபிப்பதாகவே இருக்கின்றது.

அரசதரப்பு பாராளுமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரை பெரும்பாலானோர் அதிருப்தியோடிருப்பதையே அவதானிக்க முடிகின்றது. ஆளுங்கட்சியில் பிரதான கட்சியாக இருக்கின்ற ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியே இன்றைய அரசாங்கத்தை கொண்டு வருவதில் தவறிழைத்துவிட்டதாக அண்மைக் காலங்களில் கூறிவருகின்றது.

அரசியல் ரீதியாக மட்டுமல்ல. பொருளாதார ரீதியாகவும் அரசாங்கம் குழப்பங்களை சந்தித்துள்ளது. இதன்காரணமாக அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றம் தவிர்க்க முடியாததாகவும் இருக்கின்றது. அடுத்த ஆண்டில் நிலைமை மேலும் மோசமடைவதோடு அரசாங்கத்தை எவ்வகையிலும் பதவியிலிருந்து அகற்றும் போராட்டங்கள் வலுவடையும் என்றே அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

நாட்டின் பிரபல அரசியல் விமர்சகரான கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து, நாட்டு மக்கள் வீதிகளில் இறங்கி அரசுக்கு எதிரான போராட்டங்களில் குதிப்பதற்கான சூழ்நிலைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும் ஓரிரு தினங்களுக்கு முன்னர் சுட்டிக்காட்டியிருந்தார்.

இத்தகைய பின்னணியிலேயே பாராளுமன்ற கூட்டத்தொடரையும் ஜனாதிபதி ஒத்திவைத்துள்ள நிலையில் இன்றைய ஆட்சி ஒரு நிச்சயமற்ற தன்மையை எதிர் நோக்கியுள்ளதையும் அவதானிக்க முடிகின்றது.

ஒரு ஜனநாயக ஆட்சியில் கருத்துச் சுதந்திரத்துக்கே முதன்மையளிக்கப்படுகின்றது. ஆனால், பல்வேறு அரசியல் கட்சிகளின் ஆதரவுடன் உருவாக்கப்பட்ட ஓர் அரசாங்கம், தீர்க்கமான முடிவுகளை எடுக்கும் போது பங்காளிக்கட்சிகளுடன் கலந்துரையாடி முடிவுகளை எடுக்க வேண்டியதே அவசியமானதாகின்றது.


ஆனால், கலந்துரையாடல்களுக்கும், கலந்தாலோசனைகளுக்கும் இடம் தராது எதேச்சையான போக்கை இன்றைய ஆடசியாளர்கள் கொண்டுள்ளனர் என்றே ஆளுந்தரப்பில் இருக்கின்ற பங்காளிக்கட்சிகள் தெரிவித்துள்ளன.

தற்போதைய பாராளுமன்ற கூட்டத் தொடர் ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில் அரசியல் அமைப்புக் குழு, பொது அலுவல்கள் குழு, அமைச்சுசார் ஆலோசனைக் குழு, அரச நிதிக்குழு அரச பொறுப்புக்குழு போன்ற அனைத்து குழுக்களும் கலைக்கப்பட்டுள்ளன. அத்துடன், மீளவும் அடுத்த ஆண்டில் பாராளுமன்றம் கூடும்போது இக்குழுக்களுக்கு புதியவர்கள் நியமிக்கப்படுவார்கள். அச்சமயம் ஜனாதிபதி தனக்கு மிக விசுவாசமானவர்களையே இம்முக்கிய குழுக்களின் பிரதிநிதிகளாக நியமிப்பார். இதன்காரணமாக ஜனாதிபதியின் கரங்கள் மேலும் பலமடைவதோடு ஓர் எதேச்சையான அரச நிர்வாகம் பலமடையுமென்றே எதிர்பார்க்க முடியும்.

பாராளுமன்ற கூட்டத்தொடர் இவ்வாறு ஒத்திவைக்கப்படுவது இது முதல் தடவையல்ல. கடந்த காலங்களிலும் இவ்வாறு நடந்துள்ளது. இருந்தபோதிலும் தற்போது பாராளுமன்ற கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்படுவதற்கு அரசியல் ரீதியான காரணங்களும், பொருளாதார ரீதியான காரணங்களும் இழையோடியுள்ளதையே பேராசிரியர் திஸ்ஸ வித்தாரண மற்றும் ஏனைய அரசதரப்பு, எதிர்தரப்பு உறுப்பினர்கள் தெரிவித்துள்ள கருத்துக் கண்ணோட்டங்கள் மூலமாக அறிந்து கொள்ள முடிகின்றது. அரசியல் ரீதியான காரணங்கள் அரச தரப்பின் வீழ்ச்சிப் போக்கை சுட்டிநிற்கின்ற அதேசமயம், பொருளாதார நெருக்கடி, நாட்டின் பொரு ளாதார நிலைமை அதல பாதாளத்தை நோக் கிச் சென்றுள்ளதை சுட்டிக்காட்டுகின்றது.

எனவே, அடுத்த ஆண்டின் ஆரம்பத்தில் பாராளுமன்றம் மீளவும் கூடும்போது, ஒரு புதிய ஆட்சி அதிகாரத்தை நோக்கிய நடவடிக்கைகளும் தீவிரமடையும் என்ப தையே பேராசிரியர் திஸ்ஸ விதாரண போன்ற அரச தரப்பினர் வெளியிடும் கருத்துக்கள் மூலமாக மட்டுமல்ல. எதிர்கட்சியினர் முன்வைக்கும் கருத்துக்கள் மூலமாகவும் அறிந்து கொள்ள முடிகின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



டிசெம்பர் - 15 புதன்கிழமை
பிலவ வருடம் - கார்த்திகை - 29
நல்ல நேரம் : 9.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 1.30
திதி : துவாதசி




**மேடம்**
வாழ்வில் முன்னேறும் வாய்ப்பு ஒன்று உங்களைத் தேடி வரும். கலைத்துறையினருக்கு புதிய வாய்ப்பு ஒன்று இன்று கிடைக்கும். பல தடைகளையும் தாண்டி எடுத்த செயலில் வெற்றி பெறுவீர்கள்.

**இடபம்**
எதிர்காலம் பற்றிய திட்டம் ஒன்றை வகுப்பீர்கள். நீங்கள் மதிப்பவர்களின் நன்மதிப்பை இன்று பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த தாமதங்கள் நீங்கி வேகம் பிடிக்கும்.

**மிதுனம்**
எதிலும் நிதானத்துடன் செயல்பட்டு வெற்றி பெறுவீர்கள். உண்மையற்ற நண்பர்களிடம் கவனம் தேவை. தாயின் அன்பு கிடைக்கும். வருமானம் திருப்திகரமாக இருக்கும். உடல்நலம் மேம்படும்.

**கடகம்**
சொத்து சம்பந்தமான விஷயங்களில் தாமதங்கள் இருக்கும். முக்கிய முடிவு எடுக்கும்போது அனுபவஸ்தர்களை கலந்தாலோசிக்கவும். பல காலமாக எதிர்பார்த்த தொகையில் ஒருபகுதி கைக்கு வரும்.

**சிம்மம்**
நெருக்கமான ஒருவருடன் இருந்து வந்த மனக்கசப்புகள் மறையும். வாழ்க்கைத்துணையின் முன்னேற்றம் மகிழ்ச்சியை தரும்.பெரிய வர்கள் கூறும் ஆலோசனைகளை கேட்டு நடப்பது நலம் தரும்.

**கன்னி**
மனச்சோர்வு நீங்கும். சேமிப்பில் ஆர்வம் அதிகரிக்கும். மனதில் இருந்த கவலை தீரும். முன்னேற்றமான சூழ்நிலையை காண்பீர்கள். உழைப்பிற்கு ஏற்ற அங்கீகாரம் கிடைக்கும். வாழ்வு கைகூடும்.

**துலாம்**
சிலருக்கு அலுவலகமோ, வீடோ மாற்றம் செய்யும் சூழல் உருவாகும். எடுத்த செயலில் வெற்றி பெறுவீர்கள். பரபரப்பான நாள். தொழிலில் இருந்து வந்த தடைகள் அகன்று புதிய வழி பிறக்கும்.

**விருட்சிகம்**
உணர்ச்சிவசப்படாமல் எதையும் அணுகுவது உங்களுக்கு நல்லது. நிறைகுறைகள் பல இருந்தாலும் மகிழ்ச்சியான நாள். சொத்து சம்பந்தமாக மன நிம்மதியும் மகிழ்ச்சியும் அடைவீர்கள்.

**தனுசு**
குடும்பத்தினருடன் ஒருமித்த கருத்து உண்டாகி நிம்மதி அளிக்கும். அலுவலகப் பணியில் கவனம் நெருங்கிய உறவினர் உதவி செய்வர். உறவினருடன் சண்டை முடிவிற்கு வரும்.

**மகரம்**
பிறரை நம்பி உங்களது பணிகளை ஒப்படைக்க வேண்டாம். பெரிய தீர்மானம் செய்யும் முன் பிறரிடம் ஆலோசனை கேட்பது நல்லது. நண்பர்களுடன் இருந்து வந்த கருத்து வேறுபாடு நீங்கும்.

**கும்பம்**
வீசா எதிர்பார்த்தவர்களுக்கு நற்செய்தி கிடைக்கும். பணியில் முன்னேற்றம் காண்பீர்கள். வருமானம் திருப்திகரமாக இருக்கும். வங்கி தொடர்பான விஷயங்களில் மன நிறைவடைவீர்கள்.

**மீனம்**
உறவினர்களுக்கு உதவி செய்து மகிழ்ச்சி அடைவீர்கள். நீங்கள் விரும்பி காத்திருந்த இடமாற்றம் இன்று கிடைக்கக்கூடும். குழந்தைகள் வெற்றி அடைந்தது பற்றிய செய்தி வரும்.

# பன்னீர்செல்வம், எடப்பாடி தெரிவுக்கு எதிரான வழக்கு நேற்று தள்ளுபடி

சென்னை, டிசெ. 15

அ.தி.மு.க. உள்கட்சி தேர்தலில் ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் மற்றும் இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிசாமி ஆதேர்வானதை எதிர்த்துத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை சென்னை உயர் நீதிமன்றம் நேற்று தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது.

அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் பதவிகளுக்கு டிசம்பர் 7 ஆம் திகதி தேர்தல் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. அ.தி.மு.க. கட்சி விதிப்படி 21 நாட்கள் அவகாசம் வழங்காமல் தேர்தல் நடத்தப்படுவதால், தேர்தல் முடிவுகளை அறிவிக்கத் தடை கோரி ஓசூரைச் சேர்ந்த அதிமுக உறுப்பினர் ஜெயச்சந்திரன் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்.

அவர் தனது மனுவில், இத்தேர்தலில் போட்டியிட எவருக்கும் வாய்ப்பு வழங்கவில்லை என்றும், ஒரு கோடியே 50 இலட்சம் உறுப்பினர்கள் உள்ள நிலையில் வாக்காளர் பட்டியல் வெளியிடவில்லை என்றும் கூறியுள்ளார். போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் செயல்படுவதாகக் கூறி, தேர்தல் ஆணையத்துக்கு புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்கவில்லை என தெரிவித்துள்ளார்.

இருவரின் நியமனத்துக்கு ஒப்புதல் அளிக்கத் தேர்தல் ஆணையத்துக்குத் தடை விதிக்க வேண்டும் எனவும் மனுவில் கோரப்பட்டுள்ளது. இந்த வழக்கு தலைமை நீதிபதி முனீஷ்வர் நாத் பண்டாரி, நீதிபதி ஆதிகேசவலு அமர்வில் விசாரணைக்கு வந்தபோது, உட்கட்சித் தேர்தலில், தேர்தல் ஆணையத்துக்கு என்ன பங்கு என்றும், எந்தப் பங்கும் இல்லாமல் தேர்தல் ஆணையத்தைச் சேர்த்ததால் வழக்கு விசாரணைக்கு உகந்ததா என ஆராய வேண்டும் என்றும் நீதிபதிகள் கேள்வி எழுப்பினர்.

இதையடுத்து, உட்கட்சித் தேர்தல் தொடர்பான வழக்கில் இந்திய தேர்தல் ஆணையத்தை இணைத்துள்ளதால், வழக்கு விசாரணைக்கு உகந்ததா என்பது குறித்த தீர்ப்பைத் திகதி குறிப்பிடாமல் தள்ளிவைத்த நிலையில் நேற்று தீர்ப்பு வழங்கிய பொறுப்புத் தலைமை நீதிபதி முனீஸ்வர்நாத் பண் டாரி மற்றும் நீதிபதி ஆதிகேசவலு அடங்கிய அமர்வானது, அ.தி.மு.க. உட்கட்சித் தேர்தலைத் தேர்தல் ஆணையம் அங்கீகரிக்கக் கூடாது எனத் தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்கு உகந்தது அல்ல எனக் கூறி மனுவைத் தள்ளுபடி செய்தது.

# பயங்கரவாதம் தலைதூக்கும் நிலை; தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்

## தமிழக அரசை எச்சரிக்கிறார் அண்ணாமலை

சென்னை, டிசெ. 15

“தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு நன்றாக இருந்தால் தான் தமிழகம் அமைதியாக இருக்கும். மாநிலத்தில் பயங்கரவாதம் தலை தூக்க எல்லா விதமான சூழ்நிலையும் இருக்கின்றது, எனவே தமிழக அரசு அதனை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்” என தமிழக பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலை தெரிவித்தார்.

திருநெல்வேலி மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக தமிழக பா.ஜ.க. மாநிலத்தலைவர் அண்ணாமலை, நேற்று வந்தார். ஆதன்போது நிருபர்களுக்கு பேட்டி அளித்த அண்ணாமலை கூறியதாவது:-

“தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு நன்றாக இருந்தால் தான் தமிழகம் அமைதியாக இருக்கும். மாநிலத்தில்



பயங்கரவாதம் தலை தூக்க எல்லா விதமான சூழ்நிலையும் இருக்கின்றது, எனவே தமிழக அரசு அதனை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கொழும்பு ஈஸ்டர் குண்டு வெடிப்புக்கும் தமிழகத்திற்கும் சம்பந்தம் இருப்பதாக தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மேற்குதொடர்ச்சி மலை நக்சல்கள் கட்டுப்பாட்டில் உள்ளது. மார்த்தாண்டத்தில் சமீபத்தில் உதவி காவல் ஆய்வாளர் படுகொலை செய்யப்பட்டது அடிப்படைவாதிகளின் செயல்தான்.

உதவி ஆய்வாளர்களுக்கு போதிய அதிகாரத்தை அரசு கொடுக்கவில்லை. இதுவரை பார்த்திடாத வழக்குகளை இப்போது தமிழகம் சந்தித்து வருகிறது. ஒருபுறம் சாத்தான்குளம் போன்ற சம்பவங்களும், மறுபுறத்தில் காவல்துறையினருக்கு போதிய அதிகாரமின்மையும் உள்ளது.

கேள்வி கேட்ட ஒரே காரணத்திற்காக பா.ஜ.க.வினர் 23 பேர் மீது தமிழக அரசு வழக்கு போட்டுள்ளது. பா.ஜ.க.வின் அடுத்தகட்ட வளர்ச்சிக்கு ஒரு வாய்ப்பாக இந்த உள்ளாட்சி தேர்தலை நாங்கள் பார்க்கிறோம்.

அதேபோல ஜனவரி மாத இறுதியில் 11 மாவட்டங்களில் அலுவலக கட்டிடமும் மார்ச் மாதத்தில் 4 கட்டிடமும் திறக்கப்பட உள்ளது. தமிழகத்தில் பா.ஜ.க. நிர்வாக ரீதியாக பிரிக்கப் பட்ட 60 மாவட்டங்களில் புதிய கட்டடங்கள் அமைக்கப்பட

# குப்பங்களிலும் மழைநீரிலும் தொற்றாத கொரோனா விமான நிலையத்தில் தொற்றியது - கமல்ஹாசன்

சென்னை, டிசெ. 15

“குப்பங்களிலும், மழைநீரிலும் நடந்தபோது என்னை தொற்றாத கொரோனா, அமெரிக்க - துபாய் விமான நிலையங்களிலிருந்து எனக்கு தொற்றி விட்டது’ என நடிகரும் மக்கள் நீதி மய்ய கட்சியின் தலைவருமான கமல்ஹாசன் தெரிவித்தார்.

விஷால் வெங்கட் இயக்கத்தில், நடிகர் அசோக் செல்வன் நடிப்பில் உருவாகியுள்ள ‘சில நேரங்களில் சில மனிதர்கள்’ திரைப்படத்தின் இசை வெளியீட்டு விழா சென்னை வடபழனி கமலா திரையரங்கில் நேற்று நடைபெற்றது.

படத்தின் தயாரிப்பாளர்கள் அஜ்மல் கான், ரீயா மற்றும் மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் நடிகர் கமல்ஹாசன், இயக்குநர்கள் கே. எஸ். ரவி குமார், வெற்றிமாறன், பிரபு சாலமன், நடிகை ரித்விகா உள்ளிட்டோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இங்கு தொடர்ந்து பேசிய கமல்ஹாசன், “வாழ்க்கை நமக்கு எப்போதும் கற்றுத் தரவே முயற்சிக்கிறது. நாம் தான் கர்வத்தில் பலவற்றை உதாசீனப்படுத்துகிறோம். எங்களைப் பார்த்து புதியவர்கள் வியந்து விட வேண்டாம். எங்களின் தவறுகளை



கண்டறிந்து அதை நீங்கள் செய்யாமல் இருங்கள்.

கொரோனா குறித்து மக்கள் யாரும் அஜாக்கிரதையாக இருக்காதீர்கள். நான் குப்பங்களிலும், மழை நீரில் நடந்தபோது வராத கொரோனா தொற்றானது அமெரிக்கா மற்றும் துபாய் விமான நிலையங்களில் இருந்து எனக்கு வந்துவிட்டது” -என்றார்.

# தமிழ் கட்சிகள் கூட்டத்துக்கு இ.தொ.காவுக்கும் அழைப்பு

## செல்வம் எம்.பி. கூறுகிறார்

கொழும்பு, டிசெ. 15

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்துக்கு ஆதரவு வழங்கும் ஆளுங்கட்சியிலுள்ள தமிழ் பேசும் கட்சிகளுக்கும் எதிர்காலத்தில் சந்திப்புக்கு அழைப்பு விடுக்கப்படும் என்று ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

தமிழ் பேசும் மக்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்காக தமிழ் பேசும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் ஒன்றுபடவேண்டும் என்பதை வலியுறுத்தும் விதத்திலான சந்திப்பின் இரண்டாம் கட்ட கூட்டம் கடந்த 12 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்றது.

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் இலங்கைத் தமிழரசுக்கட்சி, தமிழ் முற்போக்கு கூட்டணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப், தமிழ் தேசியக் கட்சி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஆகியவற்றின் பிரதிநிதிகள் பங்கேற்றிருந்தனர்.

தமிழ் பேசும் மக்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்கான வழிமுறைகளில் ஓரங்கமாக , அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கு இலங்கைக்கு அழுத்தம் கொடுக்குமாறு இந்தியாவிடம் ஒருமித்தக் குரலில் கோரிக்கை விடுப்பதற்கும், அதற்கான ஆவணத்தை தயாரிப்பதற்கும் கடந்த நவம்பர் 02 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் முதலாவது கூட்டம் நடைபெற்றது.

இந்நிலையில் ஆளுங்கட்சியிலுள்ள தமிழ் பேசும் கட்சிகளுக்கு ஏன் அழைப்பு விடுக்கப்படவில்லை என எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே செல்வம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (அ)

# பண்டிகை காலத்தில் பயணத்தடை வராது!

## தந்திரோபாய ரீதியாக நிலைமையை நிர்வகிப்பதற்கு அரசு நடவடிக்கை



**கொழும்பு, டிசெ. 15**

**எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் பயணத் தடைகள் ஏதுமின்றி தந்திரோபாய ரீதியாக நிலைமையை நிர்வகிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமண தெரிவித்தார்.**

அதற்கமைய, பயணத் தடையை அமுல்படுத்தாமல் பூஸ்டர் எனப்படும் செயலூக்கி தடுப்பூசி வழங்கும் வேலைத் திட்டத்தை வலுப்படுத்தவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

எதிர்வரும் பண்டிகைக் காலத்தின்போது பொதுமக்கள் ஒன்று கூடுவதை தவிர்த்துக் கொள்ளவேண்டும் என சுகாதார தரப்பினர் தொடர்ச்சியாக அறிவுறுத்தி வருகின்றனர்.

குறிப்பாக அதிக சன நெரிசல் மிக்க பகுதிகளுக்கு செல்வதை பொதுமக்கள் தவிர்த்துக் கொள்ளவேண்டும் என அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.(அ)

# பூஸ்டர் குறித்து பரவும் வதந்திகளை நம்பாதீர்!

## ஹேமந்த ஹேரத் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 15

ஆரோக்கியமான மற்றும் சுகாதாரமான தலைமுறையொன்றை உருவாக்குவதற்கு கோவிட் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை மிகவும் முக்கியமானதாகும் என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

கோவிட் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக பூஸ்டர் எனப்படும் மூன்றாவது தடுப்பூசியைச் செலுத்துவதற்கு உலக சுகாதார ஸ்தாபனம் அனுமதி வழங்கியுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

தடுப்பூசி தொடர்பில் சமூகத்தில் பலர் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டு வருவதாகவும், அவற்றில் பல உண்மைக்குப் புறம்பான கருத்துக்கள் காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

சர்வதேச ரீதியில் இந்த தொற்றுநோய் இன்னும் ஒரு புதிய அனுபவமாக இருப்பதாகவும், கோவிட் தொற்று தொடர்பில் பல்வேறு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

கோவிட் வைரஸுக்கு எதிராக உருவாக்கப்பட்ட தடுப்பூசிகள் தொடர்பான அண்மைய பரிசோதனைகளில் நேர்மறையான முடிவுகள் கிடைத்தாலும் அவற்றை முழுமையாக ஏற்றுக் கொள்ள முடியாது எனவும், அவற்றின் செயற்திறன் தொடர்பில் நிபுணர்களினால் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் கூறினார்.



தனிநபர்களின் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிப்பதற்காக, அனைத்து நாடுகளிலும் வழங்கப்படும் மூன்றாவது தடுப்பூசியை இலங்கையிலும் வழங்குவதற்கு தொற்று நோய்கள் தொடர்பில் ஆராயும் குழுவினால் சுகாதார அமைச்சுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, இலங்கையில் உள்ள 20 வயதுக்கு மேற்பட்ட 2 தடுப்பூசிகளையும் பெற்றுக் கொண்டவர்களுக்கு (பூஸ்டர்) தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள முடியும்.

அத்துடன், தொழிற்சாலைகள் மற்றும் வெவ்வேறு நிறுவனங்களில் பணியாற்றும் 18 வயது பூர்த்தியானோருக்கு நிறுவன ரீதியாக வழங்கப்படும் கோவிட் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள முடியும் என விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார். (அ)

# சீன உர நிறுவனத்துக்கு அரசு கொடுப்பனவு வழங்க ஒப்புதல்

கொழும்பு, டிசெ. 15

சீன உர நிறுவனத்திற்கு 6.7 மில்லியன் அமெரிக்க டொலரை செலுத்துவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அமைச்சரவைக் கூட்டம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் நீதி அமைச்சர் அலி ஷப்ரி ஆகியோரால் அமைச்சரவைப் இதற்கான பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

சட்ட மாஅதிபரின் ஆலோசனைக்கு அமையயே குறித்த பத்திரங்கள் முன்வைக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

சூழலுக்கு தீங்கு விளைவிக்கும் பக்றீரியாக்கள் இருந்தமை உறுதிப்படுத்தப்பட்ட நிலையில், சீனாவிலிருந்து இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட உரம் நிராகரிக்கப்பட்டது. (அ)



# பல்கலை விரிவுரையாளர் வீட்டில் நேற்று எரிவாயு அடுப்பு வெடிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 15

வடமராட்சி துன்னாலை பகுதியில் எரிவாயு அடுப்பு வெடித்து சிதறியதால், விரிவுரையாளரின் துணைவி காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக கடமையாற்றும் அ. பௌநந்தி வீட்டிலையே இச்சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை 5.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

வழமை போன்று நேற்றுக் காலையில் விரிவுரையாளரின் மனைவி உணவு தயாரிப்பில் ஈடுபட்டிருந்தபோது, எரிவாயு அடுப்பு வெடித்து சிதறியதுள்ளது.

அதன்போது வெடித்து சிதறிய அடுப்பின் பாகம் ஒன்று விரிவுரையாளரின் மனைவியின் தலையில் பட்டதில் அவர் காயங்களுக்கு உள்ளானார்.

அதேவேளை, அடுப்பு வெடித்து சிதறிய அதிர்வில், சமயலறையின் சீலிங் சீட்டும் வெடித்துள்ளது.

எரிவாயு சிலிண்டரை நேற்று முன்தினமே மாற்றி இருந்ததாக விரிவுரையாளர் தெரிவித்தார். (அ-02)

# கிளிநொச்சி காணி ஒன்றில் துப்பாக்கி ரவைகள் மீட்பு!

கிளிநொச்சி, டிசெ. 15

கிளிநொச்சி- கோரக்கன்கட்டுப் பகுதியிலுள்ள தனியார் காணியொன்றில் இருந்து துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டுள்ளன

கிளிநொச்சி- கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கோரக்கன்கட்டு பூங்காவனம் சந்திப்பகுதியிலுள்ள தனியார் காணி ஒன்றில், குழி ஒன்றை வெட்டியபோது சில துப்பாக்கி ரவைகள் அடையாளம் காணப்பட்டன.

அதனைத் தொடர்ந்து சம்பவம் அறிந்து அவ்விடத்துக்கு சென்ற கிளிநொச்சி பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் குறித்த பகுதியில் இருந்து துப்பாக்கி ரவைகளை மீட்டனர்.




இதேவேளை, குறித்த குழியினுள் மேலும் வெடிபொருட்கள் இருக்கலாம் என்ற கோணத்தில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# பருத்தித்துறை வைத்தியசாலையிலும் காஸ் அடுப்பு வெடிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 15

வடமராட்சி பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை உணவு தயாரிக்கும் இடத்தில் நேற்று காலை காஸ் அடுப்பு வெடிப்பு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்றுக் காலை 6.45 மணியளவில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் பருத் தித்துறை பொலிஸார் நேரில் சென்று தற்போது விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# இறக்குமதி தடை மேலும் நீடிக்கும்

## அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவித்தார் பஸில் ராஜபக்ஷ



**கொழும்பு, டிசெ. 15**

**இலங்கையில் ஏற்பட்டுள்ள டொலர் நெருக்கடி காரணமாக இறக்குமதிக்கு மேலும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படும் என நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவித்தார்.**

எவ்வாறாயினும் எரிபொருள், மருந்துப் பொருட்கள், அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மற்றும் கைத்தொழில்களுக்கான உள்ளீடுகளை இறக்குமதி செய்வதற்கு முன்னுரிமை அளிக்கப்படும் எனவும் நிதி அமைச்சர் கூறினார்.

டொலர் நெருக்கடியை சமாளிக்க இந்தியா, ஜப்பான், சீனா மற்றும் ஏனைய நாடுகளுடன் கலந்துரையாடல் நடத்தப்பட்டு வருவதாகக் குறிப்பிட்ட அமைச்சர் பஸில், அந்த நாடுகளிடமிருந்து சாதகமான பதில் கிடைக்கும் என நம்புவதாகவும் தெரிவித்தார்.

தனது அண்மைய விஜயத்தின்போது இந்திய அரசாங்கத்துடன் நடத்தப்பட்ட கலந்துரையாடல் வெற்றியடைந்ததாகத் தெரிவித்த அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, சர்வதேச நாணய நிதியத்துடனும் தற்போது கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருவதாகவும் கூறினார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தற்போது வெளிநாடு சென்றுள்ள நிலையில், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்றுமுன்தினம் அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது.

இலங்கையில் நிலவும் டொலர் நெருக்கடி தொடர்பில் இந்த சந்திப்பின்போது தீவிர கலந்துரையாடல் இடம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

டொலர் பற்றாக்குறைக்கு தீர்வாக சர்வதேச நாணய நிதியத்திடம் கடனுதவி பெறுமாறு பல அமைச்சர்கள் கோரிக்கை விடுத்துள்ளதுடன், ஏனையோர் சர்வதேச நாணய நிதியத்துக்குச் சென்றால் நிபந்தனைகளுக்கு இணங்கவேண்டும் எனத் தெரிவித்துள்ளனர்.

எனவே சர்வதேச நாணய நிதியத்துக்கு செல்லாமல் நட்பு நாடுகளின் ஆதரவைப் பெறுவது மிகவும் முக்கியமானது எனவும் அமைச்சர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ)

---

எரிவாயு வெடிப்பில் உயிரிழந்த பெண்:

## 100 மில்லியன் ரூபா நட்டஈடு கோரி நீதிமன்றம் செல்கின்றார் கணவர்!

கொழும்பு, டிசெ. 15

கண்டி - குண்டசாலை பகுதியில் சமையல் எரிவாயு வெடிப்பு சம்பவத்தில் உயிரிழந்த பெண்ணின் கணவர் உயர்நீதிமன்றத்தை நாடவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

எரிவாயு நிறுவனத்திடம் 100 மில்லியன் ரூபா நட்டஈடு கோரவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

எரிவாயு அடுப்பு வெடிப்பில் காயமடைந்த பெண்ணொருவர், கடந்த 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை கண்டி பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், உயிரிழந்தமை உறுதிப்படுத்தப்பட்டது.

மாத்தளை - வில்கமுவ பகுதியைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தாயான பியராயங்கனி (வயது-51) என்பவரே உயிரிழந்தார்.

கணவர் மாத்தளை வில்கமுவ பிரதேச செயலகத்துக்குட்பட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆவார். இரண்டாவது மகன் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தயாராகிக் கொண்டிருக்கிறார். தரம் 10, தரம் 5 இல் மகள்கள் கல்வி கற்கிறார்கள்.

பிள்ளைகளின் கல்விக்காக மூன்று பிள்ளைகளும் தாயாரும் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் கண்டி நாட்டறம்பனாவ பிரதேசத்தில் உள்ள வாடகை வீடொன்றுக்கு குடிபெயர்ந்துள்ளனர்.

வில்கமுவ வீட்டில் தந்தையும் மூத்த மகனும் மட்டுமே இருந்தனர்.

கடந்த முதலாம் திகதி எரிவாயு அடுப்பு வெடித்துள்ளது. பாடசாலைக்கு செல்லும் பிள்ளைகளுக்கு சமையல் செய்வதற்காக அதிகாலை 3.44 மணியளவில் சமையலறைக்கு சென்றுள்ளார். அரைத்தூக்கத்தில் இருந்த பிள்ளைகளுக்கு திடீரென பலத்த சத்தம் கேட்டது.

உயிரிழந்த பெண்ணின் இளைய மகன் தெரிவிக்கையில்-

சமையலறையில் பலத்த சத்தம் கேட்டது. நாங்கள் அங்கு ஓடினோம். சமையலறை கதவு பூட்டப்பட்டுள்ளது. நான் கதவைத் தட்டி கத்தினேன். ஆனால் சத்தம் இல்லை. பிறகு கதவை உடைத்துக்கொண்டு சமையலறைக்குள் சென்றேன். அம்மா தரையில் படுத்திருந்தார். உடம்பு எரிவதாக அழுதார். அடுப்பு பற்ற வைத்தபோது வெடித்துவிட்டது என்றார். ஓடிப்போய் போனை எடுத்து மாத்தளையில் இருக்கும் அப்பாவுக்கு சொன்னேன். இதற்கிடையில் பக்கத்து வீட்டு மாமா வந்து, அம்மாவை மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்-என தெரிவித்தார்.

எரிவாயு அடுப்பு வெடித்ததில் தீப்பற்றி எரிந்த பெண் முதலாம் திகதி காலை கண்டி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். சிகிச்சை பலனின்றி 10ஆம் திகதி உயிரிழந்தார்.

உயிரிழந்த பெண்ணின் கணவர் சுதத் நிஷாந்த குமார தெரிவிக்கையில்-

மற்ற நாடுகளில் உள்ள அரசாங்கங்கள் நிறுவனங்களைக் கட்டுப்படுத்துகின்றன. ஆனால் நம் நாட்டில் உள்ள நிறுவனங்கள் அரசாங்கத்தை கட்டுப்படுத்துகின்றன. அவமானம். மன்னிக்க முடியாதது. இது போன்ற அவலம் வேறு யாருக்கும் நடக்க அனுமதிக்க முடியாது.

அதனால் இழப்பீடு கேட்டு வழக்கு தொடருவேன். 100 மில்லியன் நட்டஈடு வழங்குமாறு கோருகின்றேன். அதுவும் எனக்கு போதாது. மனைவி மற்றும் தாயின் தேவைகளை பணத்தால் ஈடுகட்ட முடியாது. இதற்கு எரிவாயு நிறுவனமே பொறுப்பு. அரசாங்கமும் பொறுப்பு. என்னால் தாங்க முடியவில்லை. என்ன செய்வது என்று என்னால் கற்பனை செய்து பார்க்க முடியவில்லை. எரிவாயு நிறுவனம் மற்றும் அரசு மீது ஏற்கனவே வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. என் மனைவி அல்லது குழந்தைகளுக்காக நான் வழக்குத் தொடரவில்லை. இந்த நாட்டில் இதுபோன்ற அவலங்களுக்கு ஆளாகும் அப்பாவி உயிர்களுக்காக வழக்குதொடர்கிறேன்-என்றார். (அ)

---

## வவுனியா விபத்தில் மதகுரு படுகாயம்!

வவுனியா, டிசெ. 15

வவுனியா குட்செட்வீதியில் நேற்று காலை இடம்பெற்ற விபத்தில் மதகுரு ஒருவர் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

வவுனியாவில் இருந்து குட்செட் வீதி நோக்கி வந்த மோட்டார்சைக்கிளும் குட்செட் பகுதியில் இருந்து நகர் நோக்கி பயணித்த ஓட்டோவும் குட்செட் வீதியில் அமைந்துள்ள கருமாரியம்மன் ஆலயத்தின் அருகே மோதி விபத்துக்குள்ளாகின.

இவ்விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த திருகோணமலை சேர்ந்த கேதீஸ்வரன் (வயது-41) என்பவரே படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணையை வவுனியா பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

---




## வடக்கிலும் தபால் ஊழியர் நேற்று பணிப்பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 15

நாடளாவிய ரீதியில் தபால் ஊழியர்கள், பல கோரிக்கைகளை முன்வைத்து, நேற்று செவ்வாய்க்கிழமை பணிப்பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அந்தவகையில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களிலும் தபால் ஊழியர்கள், பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பணிப்பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அனைத்து தபால் நிலையங்களும் நேற்று ஊழியர்கள் பிரசன்னமாகாதமையினால் மூடப்பட்டன.

இந்நிலையில் சிறுநீரக நோய்க் கொடுப்பனவு மற்றும் முதியோர் கொடுப்பனவு போன்ற பல்வேறு தேவைகளின் பொருட்டு, தபால் நிலையத்துக்கு சென்ற பொதுமக்கள், ஏமாற்றத்துடன் திரும்பி சென்றிருந்தமையை அவதானிக்க முடிந்தது. (அ)

---

## சர்வதேச கடலில் 250 கிலோ ஹெரோயினுடன் கைதானோரை அழைத்து வருவதில் தாமதம்

கொழும்பு, டிசெ. 15

சர்வதேச கடற்பரப்பில் வைத்து 250 கிலோ ஹெரோயின் வகை போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களை இலங்கைக்கு அழைத்து வருவதில் சீரற்ற காலநிலை காரணமாக தாமதம் ஏற்பட்டுள்ளதாக இலங்கைக் கடற்படை தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு 900 கடல் மைல்களுக்கு அப்பால் தென் திசையில் 250 கிலோ கிராம் ஹெரோயினுடன் கைப்பற்றப்பட்ட படகு மற்றும் 6 சந்தேகநபர்களை நாட்டுக்கு அழைத்து வர மேலும் சில நாட்கள் எடுக்கும் என கடற்படை தெரிவித்துள்ளது.

ஆழமான கடலில் ஏற்பட்டுள்ள சீரற்ற வானிலை காரணமாகவே குறித்த செயற்பாட்டுக்கு தாமதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடற்படையினர், போதைப் பொருள் ஒழிப்புப் பணியகத்துடன் இணைந்து முன்னெடுத்த தேடுதலின்போது குறித்த ஹெரோயினை கடத்திச் சென்ற வெளிநாட்டுப் படகு அண்மையில் கைப்பற்றப்பட்டது.

அந்த படகில் சுமார் 225 பொதிகளில் இருந்து 250 கிலோ கிராம் ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டதுடன் பாகிஸ்தான், ஈரான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த அறுவர் கைது செய்யப்பட்டனர் என கடற்படை தெரிவித்தது. (அ)

---

## பஸ் மீது கல் வீச்சு

கொழும்பு, டிசெ. 15

எம்பிலிப்பிட்டியில் இருந்து மஹரகம நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ் மீது கல்வீச்சு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எம்பிலிப்பிட்டி துன்கம் பிரதேசத்தில் வைத்து 3 நபர்களினால் இவ்வாறு கல்வீச்சு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் பஸ்ஸின் கண்ணாடி ஒன்று சேதமடைந்தது.

இந்த அதிசொகுசு பஸ் அதிவேக நெடுஞ்சாலையில் போக்குவரத்து சேவையில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# உள்கட்சிப் பிரச்னைகளால் போராடுகிறது அரசாங்கம்

## மயந்த திஸாநாயக்க சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ. 15

அரசாங்கம் பாராளுமன் றத்தில் பெரும்பான் மையை கொண்டிருந்தாலும் உள்கட்சிப் பிரச்னைகளால் போராடி வருவதாக எதிர்க் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

கண்டியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பாராளு மன்ற உறுப்பினர் மயந்த திஸா நாயக்க, தலைமைத்துவ மாற் றம் தேவையென ஆளும் தரப் பினர் கருதுவதாகக் கூறினார்.

அத்தோடு தற்போதுள்ள ஆட்சியை மாற்றவேண்டும் என்பதே ஆளும் கட்சியைச் சேர்ந்த சில உறுப்பினர்களின் கருத்து என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில் ஆளும்தரப் பில் உள்ள 40க்கும் மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்க்கட்சியுடன் பேச்சு நடத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் தற்போ தைய செயல்பாடுகளால் விரக்தியடைந்துள்ள ஆளும் கட்சி உறுப்பினர்கள், தாம் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட் டங்களுக்கு செல்ல வெட்கப் படுவதாகவும் மயந்த திஸா நாயக்க குறிப்பிட்டார். (அ)

### பாராளுமன்றம் ஒத்திவைப்பு;

# ஜனாதிபதியின் முடிவில் உள்நோக்கம் கிடையாது

## கூறுகிறார் அமைச்சர் ஜி.எல். பீரிஸ்



**கொழும்பு, டிசெ. 15**

**“பாராளுமன்ற அமர்வை ஜனாதிபதி இடை நிறுத்துவதென்பது சாதாரண நடவடிக்கை. அதில் வேறு நோக்கம் எதுவும் கிடையாது. அரசமைப் பிலுள்ள அதிகாரத்தை ஜனாதிபதி பயன்படுத் தியுள்ளார்.” - என்று வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.**

பொதுஜன பெரமுனவின் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முன்தினம் முற்பகல் அக்கட்சி தலைமையகத்தில் நடைபெற்றது.

இதன்போது அந்நிய செலா வணி இருப்பு, நிதி நெருக்கடி, கோப் குழுவில் மாற்றம் உள்ளிட் டவற்றை கருத்திற் கொண்டா ஜனாதிபதி பாராளுமன்ற அமர்வை இடைநிறுத்தினார் என எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் பீரிஸ் மேற்கண் டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

பாராளுமன்ற அமர்வை இடைநிறுத்துவதற்கான அதி காரம் அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதிக்கு இருக்கின்றது. 1978 ஆம் ஆண்டுமுதல் இற் றைவரை பதவியிலிருந்த ஜனா திபதிகள் அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தியுள்ளனர். எனவே, இது விசேட நடவடிக்கையாக அமையாது. அரசமைப்பின் பிர காரம் இடம்பெறும் நடவடிக்கை.

பாராளுமன்றம் கூடும்போது குழுக்கள் மறுசீரமைக்கப்படும். அதேபோல சபை நடவடிக்கை களையும் உரிய வகையில் முன் னெடுக்க முடியும். எனவே, இந்த இடைநிறுத்தம் தொடர் பான வீண் ஊகங்கள் தேவை யற்றது-என்றார். (அ)

# நானாட்டான் பிரதேச சபையின் பட்ஜெட் நேற்று நிறைவேற்றம்

மன்னார், டிசெ. 15

நானாட்டான் பிரதேச சபை யின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை குழப்பங்க ளுக்கு மத்தியில் நிறைவேறி யது.

நானாட்டான் பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக் கான வரவு-செலவுத் திட்ட சபை அமர்வு தவிசாளர் திருச் செல்வம் பரஞ்சோதி தலை மையில் நேற்று செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணியள வில் நானாட்டான் பிரதேச சபை மண்டபத்தில் இடம் பெற்றது.

கூட்டம் ஆரம்பமாகியதில் இருந்து தமிழ்த் தேசியக் கூட் டமைப்பு உறுப்பினர்களுக்கும், எதிர்த் தரப்பினருக்கும் இடை யில் கடும் வாக்குவாதம் இடம் பெற்றது.

எனினும் வரவு-செலவுத் திட்டத்துக்கான வாக்கெடுப்பு பகிரங்கமாக இடம்பெற்றது.

இதன்போது நானாட்டான் பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் மேலதிகமான ஒரு வாக்கினால் நிறைவேறியது.

ஆதரவாக தலைவர் உள் ளிட்ட 7 உறுப்பினர்களும், சிறி லங்கா சுதந்திரக் கட்சி உறுப் பினர் ஒருவர் உள்ளடங்கலாக 8 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர்.

எதிராக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்,உதய சூரியன் உள்ளிட்ட கட்சிகளைச் சேர்ந்த 7 உறுப்பினர்கள் வாக்களித் தனர். ஈ.பி.டி.பி.கட்சி உறுப் பினர் வாக்களிப்பில் கலந்து கொள்ள வில்லை. (அ)

## முதலீட்டு சபைக்கு புதிய தலைவர் நியமனம்

கொழும்பு, டிசெ. 15

இலங்கை முதலீட்டுச் சபைக் கான புதிய தலைவராக ராஜா எதிரிசூரிய நியமிக்கப்பட்டுள் ளார். அறிக்கை ஒன்றை வெளி யிட்டு ஜனாதிபதி ஊடகப் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் குறித்த நிய மனம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இறக்குமதி செய்த எரிவாயுவை திருப்பி அனுப்புவதற்கு தீர்மானம்

கொழும்பு, டிசெ. 15

தரம் தொடர்பான சிக்கல் காரணமாக லிட்ரோ நிறுவனம் இலங்கைக்கு இறக்குமதி செய்த எரிவாயுவை திருப்பி அனுப்ப தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

லிட்ரோ எரிவாயு நிறுவனத் தினால் அண்மையில் நாட் டுக்கு கப்பல் மூலம் கொண்டு வரப்பட்ட எரிவாயுவை திருப்பி அனுப்பப் அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த எரிவாயுவில் உரிய செறிமானத்துடன் கூடிய எதில் மேகெப்டன் உள்ளடங்காமை கண்டறியப்பட்டுள்ளது.

எரிவாயுவின் தரம் தொடர் பில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை அறிக்கைகள் மூலம் இந்த விடயம் தெரிய வந்துள்ளதாக அந்த தகவல்கள் குறிப்பிட்டுள்ளன.

இதேவேளை, தரமற்ற சமையல் எரிவாயுக்களை சந்தைக்கு விநியோகித்ததன் ஊடாக ஏற்பட்ட அனர்த்தங்க ளுடன் தொடர்புடைய நிறு வனங்களுக்கு எதிராக வழக்கு தொடரப்படவுள்ளது.

இந்த வழக்கு அடுத்த வாரம் தொடரப்படவுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் சாந்த திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தமது அதிகார சபையால் முன்னெடுக் கக்கூடிய சகல செயல்பாடுக ளும் முன்னெடுக்கப்ப டும் என அவர் குறிப்பிட்டார். (அ)

# அரசியலுக்காக யாழ்.மாநகர சபையை கலைப்பது மக்களின் நலனை பாதிக்கும்

## விக்னேஸ்வரன் எம்.பி. சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 15

வெறும் கட்சி சார்பான முரண் பாடுகளால் யாழ். முாநகர சபை பாதீட்டை தோற்கடித்து ஒரு தகுதி வாய்ந்த நகர பிதாவை இழக்க நாங்கள் இடம் அளிக் கக்கூடாது என தமிழ் மக்கள் தேசியக் கூட்டணித் தலைவரும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான க.வி.விக் னேஸ்வரன் வலியுறுத்தி யுள்ளார்.

வரவு-செலவுத் திட்டத்தை தோற்கடிப்பதால் நகரபிதா வி.மணிவண்ணனை வெளி யேற்றலாம் என்ற எண்ணத்தில் சில நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுவருவதை நான் அறிவேன். மக்கள் பிரதிநிதிகள் தங்கள் சொந்த நலன்களுக்கு, விருப்பு வெறுப்புகளுக்கு முதலிடம் கொடுப்பதால்தான் இவ்வா றான சிந்தனைகள் மேலோங் குகின்றன. யாழ் மக்களின் நலன் பற்றியோ, வருங்காலம் பற் றியோ சிந்திக்காது எடுக்கப்ப டும் நடவடிக்கைகள் பாரிய பின் விளைவுகளை ஏற்படுத்தும் என வும் அவர் நேற்று வெளியிட் டுள்ள அறிக்கையில் குறிப்பிட் டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரி விக்கையில்-

மணிவண்ணன் எங்கள் கட்சி உறுப்பினர் அல்லர். ஆனால் அவர் மக்கள் சேவை செய்வதில் ஆர்வம் கொண்ட வர். தமிழ் மக்கள் சிந்தனையை தகுந்த விதத்தில் உள் நாட்ட வர்களிடமும் வெளிநாட்டவர் களிடமும் கொண்டு செல்லக் கூடியவர்.

அவரின் திறனும் அறிவும் ஆற்றலும் ஆளுமையும் மற் றைய உறுப்பினர்கள் எத்தனை பேரிடம் இருக்கின்றது? என் பதை உறுப்பினர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். வெறும் கட்சி சார்பான முரண்பாடுக ளால் ஒரு தகுதி வாய்ந்த நகர பிதாவை இழக்க நாங்கள் இடம் அளிக்கக்கூடாது.

இந்தக் கால கட்டம் நெருக்கடி மிக்கது. அறிவு, ஆளுமை, அதிகாரம் கொண் டவர்களை நாங்கள் பதவி



இழக்கச் செய்தோமானால் அரசாங்கத்தின் கரவான நடவடிக்கைகளைக் கண்டிக்க முடியாமல் போய்விடும். எனக்கு மணிவண்ணனைத் தனிப்பட்ட முறையில் அதிகம் தெரியாது. ஆனால் அவரின் செயல்கள் பேச்சுக்கள் அவரை எனக்கு அடையாளப்படுத் தியுள்ளன.

தயவு செய்து பதவியில் இருக் கும் நகரபிதாவை கட்சிக் கார ணங்களுக்காக வெளியேற்றா தீர்கள் என்று சகல யாழ் மாநகர சபை உறுப்பினர்களிடமும் அன்பான கோரிக்கை ஒன்றை முன் வைக்கின்றேன்-என்று குறிப்பிட்டுள்ளார். (அ)

# கைதியின் வயிற்றில் 56 கிராம் வெள்ளி!

கொழும்பு, டிசெ. 15

வெலிக்கடை சிறைச்சாலை யில் இருந்து அங்குனகொல பெலஸ்ஸ சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்ட கைதி ஒருவரின் வயிற்றில் இருந்து 56 கிராம் வெள்ளி நகை மீட்கப் பட்டுள்ளது.

குறித்த கைதி நகையை விழுங்கியதாக கூறப்பட்ட நிலையில், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் நேற்று முன் தினம் நகையை மீட்டனர்.

மேலும், இவரிடம் மேற் கொள்ளப்பட்ட சோதனையின் போது ஹெரோயின் போதைப் பொருளை வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டதுடன், வெள்ளி நகையும் கண்டுபிடிக் கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரை மலம் கழிக்க வைத்திருந்ததாகவும், இதன் போது நீல நிற கார்பன் பேப்ப ரில் சுற்றப்பட்டு, வெள்ளை பொலித்தீனில் சுற்றப்பட்ட நிலையில் நகை மீட்கப்பட்ட தாகவும் பொலிஸார் தெரிவித் தனர்.

சந்தேகநபர் 51 வயதுடைய நுகேகொட - மிரிஹான பிர தேசத்தை சேர்ந்தவர் என்றும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் கூறினர். (அ)

# யாழ்ப்பாண பனை, தென்னை சமூகங்கள் அன்றும் இன்றும்




செல்லையா செல்வராசா (யாழ்மாவட்ட பனை தென்னை கூட்டுறவுச்சங்க தலைவர்) உடனான நேர்காணலின் கட்டுரையாக்கம். இவர் சுதுமலை தெற்கை சேர்ந்தவர். இவர் கூட்டுறவுத்துறையில் 44 வருட அனுபவத்தை கொண்டவர். ஒரு சீவல் தொழிலாளியாக 1977ஆம் ஆண்டு கோண் டாவில் பனைதென்னை கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்தவராக இணைந்து அதன்பின் 1992 ஆம் ஆண்டில் அச் சங்கத்தின் செயலாளராகி 1998ஆம் ஆண்டிலிருந்து தற்போதுவரை தலைவராக உள்ளார். அத்துடன் 2021ஆம் ஆண்டிலிருந்து யாழ் மாவட்ட பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தலைவராகவும் பதவி வகிக்கின்றார்.

1970களுக்கு முன்னர் சீவல் தொழிலில் ஈடுபடும் மக்கள் சமூகரீதியான ஒடுக்கப்பட்டு சாதி ரீதியான அடக்கு முறைக்கும் உட்படுத்தப்பட்டிருந்தனர். 45 வருடங்களாக மரவரி முறைக்கூடாக தாம் ஈடுபடும் தொழிலுக்கு நியாயமானதும் ஒழுங்கானதுமான வருமானத்தை பெறுவதற்கோ தொழில் ரீதியாக ஏற்படும் ஆபத்துக்களுக்கோ போதிய பாதுகாப்போ அல்லது காப்பீடுகளோ இல்லாத நிலையில் வாழ்ந்து வந்தனர். பொருளாதார ரீதியாகவும் இவர்கள் வலிமையற்றவர்களாகவே இருந்தார்கள். தொழிலின் ஆபத்தான நிலைகாரணமாக குடும்பதலைவரை இழக்க நேரிட்டால் பிள்ளைகளே குடும்பத்தில் வருமான மீட்டும் நபராக மாறவேண்டிய சூழல் இருந்தது. இது அந்த பிள்ளைகளின் கல்வியிலும் தாக்கத்தை செலுத்தியது. இவர்களின் பிரச்னைகளை கவனத்தில் கொள்ளவும் குரல் கொடுக்கவும் சரியான அமைப்புகள் இருக்கவில்லை.

**எதிர்ப்புகளின் மத்தியில் எழுச்சி**

1971ஆம் ஆண்டு நிதியமைச்சராக இருந்த என்.எம்.பெரேராவினால் வட பகுதியில் உள்ள சீவல் தொழிலாளர்களுக்கு மரவரி முறை இரத்துச்செய்யப் பட்டு கூட்டுறவு முறை அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால் ஏற்றத்தாழ்வுடைய சமூக அமைப்பின் காரணமாக அதுவரை கூட்டுறவு முறைக்குள் உள்வாங்கப் படாத சீவல் தொழிலாளர்கள் அதன் அனுகூலங்களை நடைமுறையிலோ அல்லது கல்வி மூலமோ அறியாததால் அந்த முறையை எதிர்த்தனர். இவர்களது அறியாமையை பயன்படுத்தி மரவரி முறைக்கூடாக பாரிய இலாபமீட்டியவர்களும் சீவல் தொழிலாளர்களை கூட் டுறவு முறைக்கு எதிராக குரல் கொடுக்க துாண்டினார்கள். இவ்வாறான பல எதிர்ப்புகளின் மத்தியில் 1972ஆம் ஆண்டு பனை தென்னை வள கூட்டுறவுச்சங்கங் கள் உருவாக்கப்பட்டது.

அச்சமூகத்திற்குள் இருந்த அமரர் ஜி.நல்லையா, க.நடராஜா போன்றவர்கள் கூட்டுறவு தத்துவத்தை உணர்ந்து அதை பலருக்கும் கல்வியாக புகட்டி சங்கங்களை வளர்ப்பதற்கு பாடுபட்டார்கள். ஆரம்பத்தில் ஓரளவு படித்த இளைஞர்கள் இணைந்தார்கள். அவர்களின் உதவியுடன் கூட்டுறவு முறைக்கூடான வளர்ச்சித் திட்டங்கள் (விபத்துத் திட்டம், கடன் திட்டம்) பற்றிய பிரச்சாரங்கள் செய்யப்பட்டது. இதன் விளைவாக சுமார் 8500 சீவல் தொழிலாளர்கள் அங்கத்தவர்களாக இணைந்தார்கள்.

**உற்பத்திகளும் சாவால்களும்**

ஆரம்பத்தில் 18 கள்ளு உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச்சங்கங்கள் உருவாகியது. 1974 ஆம் ஆண்டளவில் உலக சந்தையில் சீனியின் விலை அதிகரித்ததால் பனை வெல்ல உற்பத்தியில் ஆர்வம் காட்டப்பட்டது. இதன் காரணமாக 71 பனை வெல்ல உற்பத்தி தொழிற்சாலைகள் அரச ஆதரவுடன் உருவாக்கப்பட்டு மக்களுக்கு உதவின. அதன்பின் உலக சந்தையில் சீனியின் விலை குறைவடைந்ததாலும் இலங்கையின் இறக்குமதி சார் பொருளாதாரம் காரணமாகவும் இத் தொழிற்சாலைகளால் இலாபகரமாக இயங்கமுடியாத நிலை ஏற்பட்டது.

விற்பனை செய்பட்டது போக மிஞ்சிய கள்ளினை பனை வெல்லமாக மாற்றி நட்டத்தை தவிர்க்க சங்கங்கள் முற்பட்ட போதும் அதற்கூடாக முழுமையான தீர்வு காண முடியவில்லை. இதனால் சாராய வடிசாலைகள் உருவாக்கப்பட் டது. இது மிஞ்சும் கள்ளினால் ஏற்படும் நட்டத்திற்கு ஓரளவு தீர்வை தந்தது. இவற்றுடன் தற்போது சங்கங்கள் கள் போத்தலில் அடைத்து விற்பனைசெய்தல், கருப்பணி உற்பத்தி, பனங்களி போத்தலில் அடைத்து விற்பனை செய்தல் போன்ற உற்பத்தி செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றன.

தற்போது 19 சங்கங்கள் கள்ளு போத்தலில் அடைத்து விற்பனை செய்து வருகின்றன. 2 கொத்தணிகளால் சாராய வடிசாலைகள் நடாத்தப்பட்டு வருகின்றன. இவ்விரு உற்பத்திகளையும் செய்வதற்கு அரசாங்கத்திற்கு அதிகளவு வரி செலுத்த வேண்டியிருக்கிறது. குறிப்பாக 1 லீற்ரர் கள்ளு போத்தலில் அடைப்பதற்கு ரூபா. 25ஐயும் 1 லீற்ரர் சாராயத்திற்கு ரூபா. 1,144ஐயும் வரியாக செலுத்தவேண்டியுள்ளது. மேலும் ஒவ்வொரு ஆண்டும் அவர்களின் உற்பத்திக்கான அனுமதி பத்திரத்தை மீளப்புதுப்பிப்பதற்கு ரூபா. 500,000ஐ வரியாக செலுத்த வேண்டியுள்ளது. சிறிய சங்கங்களை பொறுத்தவரை அவை ஆண்டுக்கு 75,000 லீற்றர் போத்தலில் அடைத்த கள்ளையே உற்பத்தி செய்யக்கூடியவையாக உள்ளன. இந்த உற்பத்தியிலிருந்து வரிகளை செலுத்துவது சிறிய சங்கங்களுக்கு சுமையாக இருக்கிறது.

உற்பத்திக்கான மூலப்பொருள் தாராளமாக கிடைக்கிறது. ஆனால் சந்தைப்படுத்தலில் பாரிய சவால்களை சங்கங்கள் எதிர்நோக்குகின்றன. இது மிகவும் ஆபத்தான தொழிலாக இருப்பதாலும் பாரம்பரிய முறையில் மரங்களில் ஏறி தொழில் செய்யவேண்டி இருப்பதா லும் தற்போது சீவல்தொழிலில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கை சடுதியாக குறைந்து வருகிறது (மொத்த சீவல் தொழிலாளர்களின் எண்ணிக்கை 3,000). நவீன தொழில்நுட்ப முறைகள் இத் தொழிற்துறையில் புகுத்தப்பட்டால் இளம் தலைமுறையினரும் இதில் ஈடுபடுவதற்கான வாய்புள்ளது.







பெண்களும் பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்களில் அங்கத்தவர்க ளாக உள்ளார்கள். இவர்கள் கடன் திட்டங்கள், காப்புறுதி திட்டம் மற்றும் சமூக மேம்பாட்டு திட்டங்களுக்கூடாக பயன் பெறுகிறார்கள். சிலர் உற்பத்தி செயற்பாடுகளில் தொழில் வாய்ப்பை யும் பெறுகிறார்கள். பெண்களுக்கான தொழில் முயற்சியாக பனை சார் கைவினைப் பொருட்களின் உற்பத்தியை அரச திணைக்களங்களும், தொண்டு நிறுவனங்களும் வேறு சில சமூக அமைப் புகளும் பரிந்துரைக்கின்றன. உண்மை யில் இந்த உற்பத்திகளை செய்வதில் சிரமம் இல்லை ஆனால் அவற்றை விற்று இலாபமீட்டுவதில்தான் பிரச்னை எழுகிறது.

**சமாசமும் செயற்பாடுகளும்**

1979ம் ஆண்டின் பிற்பகுதியில் 18 சங்கங்களையும் ஒருங்கமைப்பதற்கும் ஆலோசனைகளை வழங்குவதற்கும் மாவட்ட ரீதியாக சமாசம் ஒன்று உரு வாக்கப்பட்டது. ஆரம்ப காலங்களில் சமாசம் தொழிலாளர் நல திட்டங்கள் மற்றும் சங்கங்களுக்கிடையிலான ஒருங்கிணைப்பு ஆகியவற்றிலேயே கவனம் செலுத்தியது. இதற்கு அமைவாக 1980 ஆம் ஆண்டில் விபத்து நல திட்டத்தை ஆரம்பித்தது. பனையின் மூலப்பொருட்களில் இருந்து உயிர்காக்கும் சித்தவைத்திய கூட்டுறவுச்சங்கமும் ஆரம்பிக்கப் பட்டது.

1994ஆம் ஆண்டில் மகளிர் பயிற்சிகள், நிர்வாகத்தில் மகளிருக்கான இடம் போன்ற சமூக முன்னேற்ற திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. தற்போது சமூக மேம்பாட்டுத்திட்டம், விபத்துநல ஓய்வூதிய திட்டம், சகாய நல நிதித்திட்டம் ஆகியன நடைமுறையில் உள்ளன. சமூக மேம்பாட்டுத் திட்டத்திற்கூடாக பாலர் பாடசாலைகள் நடாத்துதல் (240 பாலர் பாடசாலைகள் யாழ்மாவட்டத்தில் இயங்குகின்றன), தரம் 5, கல்வி பொதுத் தர சாதாரணதர, உயர்தர மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கான புலமைப்பரிசில்கள் வழங்கல் மற்றும் அங்கத்தவரின் குடும்ப உறுப்பினர்களின் சத்திரசிகிச்சைகளுக்கு நிதிசார்ந்த உதவிகளை வழங்கல் போன்றவற்றை சமாசம் வழங்குகிறது. இதற்கு அங்கத்தவர் நாளாந்த கள்ளு விற்பனையில் 1 பொத்தலுக்கு ரூபா. 50 சதம் என்றவாறாக சங்கத்திற்கு வழங்க வேண்டும். சங்கம் சமாசத்திடம் அங்கத்தவரின் பெயரில் அத் தொகையை சேமிக்கும்.

விபத்து நல ஓய்வூதிய திட்டத்திற் கூடாக அங்கத்தவருக்கு விபத்து ஏற்பட்டால் அதற்கான மருத்துவ செலவுகள் வழங்கப்படும். மேலும் 60 வயதில் அங்கத்தவர் ஓய்வு பெறும் போது அவரின் சேமிப்பின் 4 வீதம் ஒவ்வொரு மாதமும் ஓய்வூதியமாக வழங்கப்படும். தற்போது 1300 அங்கத்தவர்கள் இத்திட்டத்திற்கூடாக பயன் பெற்று வருகிறார்கள்.


சகாயநல திட்டம் என்பது ஒரு காப்புறுதி திட்டம். இதில் இணைவதற்கு ஒரு அங்கத்தவர் ஒவ்வொரு வருடமும் ரூபா. 1,000 ஐ சங்கத்திற்கு செலுத்த வேண்டும். இதன் முதிர்வுகாலம் 5 வருடம். ஒரு அங்கத்தவருக்கு மரணம் ஏற்பட்டால் அவரின் குடும்பத்திற்கு உடனடியாக ரூபா. 300,000 நட்டஈடாக இத்திட்டத்திற்கூடாக வழங்கப்படும். இதுபோன்ற செயற்பாடுகளால் இச் சமூகத்தை சார்ந்த மக்களின் பொருளாதார நிலை மேம்பட்டுள்ளது. பிள்ளைகளின் கல்விநிலை உயர்வடைந்துள்ளது.

மேலும் சமாசம் ஏற்றுமதி சார்ந்த சந்தைப்படுத்தல் வாய்ப்புகளை விரிவுபடுத்தல், இயந்திரங்கள் மற்றும் தொழில்நுட்பங்களை சங்கங்களுக்கு பெற்றுக்கொடுத்து இத்தொழிற்துறையை அபிவிருத்தி செய்வதற்கான முயற்சிகளை முன்னெடுக்கவுள்ளது. இதற்கான உதவியை மாகாண மற்றும் அரசாங்க மட்ட அமைப்புக்களிடம் எதிர்பார்க்கிறது.

**நேர்காணலும் கட்டுரையாக்கமும்:**
**கா.சுகன்யா**

**கட்டுரையாளர்:**
**உதவி ஆய்வாளர், வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கி.**

# சுமந்திரன் எதற்காக வரலாற்றை திரித்து பேசுகிறார்?



- பகவான் சிங் -
தமிழகத்தின்
சிரேஷ்ட பத்திரிகையாளர்

உங்களது தமிழ் தேசிய கூட்டமைப்புத் தலைவர்கள் பாரதப் பிரதமர் மோடியை டிசம்பர் 7-8 சந்திப்பதற்கு டெல்லி பயணம் மேற்கொள்கிறார்கள் என்றும், பிறகு அவர்கள் மாவையாரின் மகன் திருமணம் 9ஆம் திகதி நடக்க இருந்ததால் பயணத்தைத் தள்ளிப் போட்டார்கள் என்றும் செய்திகள் வந்தன. இந்த சந்திப்பு தவிர்க்கப்பட்டதற்குப் பின்னணி என்ன என்பது பற்றியும் சில கருத்துக்கள் கூறப்பட்டன. டெல்லியின் முக்கிய புள்ளி ஒருவர் என்னிடம் இதுபற்றிப் பேசும்பொழுது, இது கோட்டாபயவின் செயல் என்றார். கோட்டாபயவிற்குப் பின்னால் சீனாவின் நிழல் பளிச்சென்று தெரிகிறது என்றும் கூறினார்.

இலங்கையில் உள்ள எனது அரசியல் மற்றும் ஊடகத்துறை நண்பர்கள், பிரதமர் நரேந்திர மோடியை டிசம்பர் 7-8ஆம் திகதிகளில் சந்திப்பதற்காக தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களைச் சேர்ந்த ஒரு குழுவினருடன் செல்ல முடியுமா என்று கொழும்பில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகர் சம்பந்தரைக் கேட்டபோது, சம்பந்தர் அதை ஏற்றுக்கொண்டார் எனவும், இதை சுமந்திரனிடம் தெரிவித்த சம்பந்தர், பிற தமிழ் தேசிய கூட்டமைப்புத் தலைவர்களிடம் பேசி, அவர்களையும் அழைக்குமாறும் சுமந்திரனைக் கேட்டுக்கொண்டதாகக் கூறுகின்றனர். தனது மகனின் திருமண நிகழ்ச்சி இருப்பதால் இதில் கலந்துகொள்ள முடியாது என்று சம்பந்தரிடம் கூறிய மாவை, மற்ற தலைவர்களுடன் சம்பந்தர் டெல்லி செல்லவேண்டும் என்றும் வலியுறுத்தியிருக்கிறார். மாவை இப்படிக் கூறியபின்னரே உயர் ஸ்தானிகரின் அழைப்பை சம்பந்தர் ஏற்றுக்கொண்டிருக்கிறார். ஆனால் பின்னர், இந்த நிகழ்ச்சியைத் தள்ளிப் போடவேண்டும் என்றும், பிரதமர் அலுவலகத்தினரிடம் பேசி ஒரு புதிய திகதியை முடிவெடுக்க வேண்டும் என்றும் சம்பந்தர் உயர் ஸ்தானிகரிடம் கேட்டிருக்கிறார்!

"பிரதமரை சந்திக்கும் குழுவில் மாவை இல்லாவிட்டால் அவர் வருத்தப்படுவார் என்று சம்பந்தர் காரணம் கூறியிருக்கிறார். ஆனால் மாவையார், தான் வரமுடியாவிட்டாலும், குழுவினர் இந்த சந்திப்பை மேற்கொள்ளவேண்டும் என்று ஏற்கனவே சொல்லிவிட்டார். பிறகு, சுமந்திரனிடம் தனது பாஸ்போர்ட் காலாவதியாகிவிட்டதாக சம்பந்தர் சொல்லவே, தனது கட்சித் தலைவருக்காக அதிரடியாக செயல்பட்டு, உடனடியாக பாஸ்போர்ட் காலாவதி தேதியை சுமந்திரன் நீட்டித்திருக்கிறார். பிறகு தனக்கு வயதாகிவிட்டது, உடல்நிலை சரியில்லை என்று கூறிய சம்பந்தர், தனது மகளும் உதவிக்காக தன்னுடன் டெல்லிக்கு வரவேண்டும், ஆனால், சகோதரியுடைய பாஸ்போர்ட் தொலைந்துவிட்டது என்று கூறியிருக்கிறார்" என்று, இலங்கையைச் சேர்ந்த மூத்த தமிழ்ப் பத்திரிக்கையாளர் என்னிடம் கூறினார். "வேறு வழியில்லாமல், இந்தியா இதைத் தள்ளிப் போட்டிருக்கிறது. டெல்லித் தலைமை இதுபற்றிக் கடும் அதிருப்தியில்




இருக்கிறது" என்றும் அவர் கூறினார்.

டெல்லியைச் சேர்ந்த என் நண்பர் ஒருவர் பேசும்போது, "ஆமாம், நாங்கள் அதிருப்தியில் இருக்கிறோம். இந்த விஷயம் குழப்பமாக இருக்கிறது. சம்பந்தன், மாவை ஆகிய இருவரும் முதலில் இதை ஒத்துக்கொண்டார்கள். சுமந்திரனோ, ஒத்துழைத்ததோடு மட்டுமல்லாமல், இந்தப் பயணம் நடைறெ எல்லா முயற்சிகளையும் செய்திருக்கிறார். பிறகு எங்கே தவறு நடந்தது? இதன் பின்னணியில் கோட்டா பய இருக்கிறாரா? சீனா வும் இதில் ஒரு காரணியா?" என்று கேட்டார். அடுத்த சில வாரங்களில் இந்திய விவகாரங்களில் தமிழ் தேசிய கூட்டமைப்பு எப்படி நடந்துகொள்ளப் போகிறது என்பதை டெல்லித் தலைமை உன்னிப்பாக கவனிக்கும் என்றும் கூறினார்.



## நாமல் ஒரு தலைவராக உருவாகிறார்

டெல்லியைச் சேர்ந்தவரும் இலங்கை விவகாரங்களில் நிபுணருமான ஒரு நண்பர் பேசும்போது, "கொழும்பில் கோட்டாபயவின் பிடி தளரத் தொடங்கியிருக்கிறது. நாமல் ஒரு தலைவராக உருவாகிறார். அவரது தந்தை மஹிந்தா, ஒக்ரோபர் மாதம் புத்தமத சுற்றுலாவை ஊக்குவிப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள சர்வதேச விமான நிலையைத்தைத் திறந்து வைக்க நாமலை குஷிநகருக்கு அனுப்பினார். அந்தப் பயணத்தின்போது, பாரதப் பிரதமர் மோடியின் அழைப்பின்பேரில் 100 பிக்குகளையும் விமானத்தில் கூட்டிச்சென்ற நமல், பகவத் கீதையின் ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் மொழிபெயர்ப்புகளை மோடிக்குப் பரிசளித்தார். இந்த மொழிபெயர்ப்புகள் நாமலின் உத்தரவால் உருவானவை. தனது உரையின் போது, இரண்டு நாடுகளுக்கு இடையிலான புத்தமதப் பிணைப்பை வலுப் படுத்துவதற்காகப் பிரதமர் மோடி வழங்கிய 15 மில்லியன் அமெ ரிக்க டொலர் நன்கொடையைக் குறிப்பிட்டு, அதற்கு நன்றியும் தெரிவித்தார்" என்றார்.

சனிக்கிழமையன்று (டிசம்பர் 11) இலங்கை அரசியலமைப்புச்சட்டத்தின் 13ஆவது திருத்தம் பற்றி சுமந்திரன் பேசிய 'சூப்பர்' பேச்சை நீங்கள் கேட்டிருக்கலாம். 13ஆவது சட்டத்திருத்தத்தினால் எந்தப் பயனும் இல்லை என்பதால், 'அதைவிட சிறப்பான ஒன்றைத் தருவதாக' அதிபர் ராஜபக்ஷ உறுதியளித்திருப்பதாக நினைவுபடுத்திய சுமந்திரன், தொடர்ந்து கர்ஜித்தார்: "சில தமிழ் தேசிய கூட்டமைப்புத் தலைவர்கள், 13ஆவது திருத்தத்தை மீண்டும் அமல்படுத்தவேண்டும் என்று பாரதப் பிரதமர் மோடிக்குக் கடிதம் எழுதியிருப்பதாகக் கூறுகிறார்கள். இதற்காகத் தமிழ்த் தலைவர்கள் ஒன்றிணைவார்கள் என்றும் கூறுகிறார்கள். அது நடக்காது. 13ஆவது திருத்தத்தோடு நிற்பதாக இருந்தால் எதற்கு ஆயிரக்கணக்கான தமிழர்களை நாங்கள் பலிகொடுத்தோம்? 13ஆவது திருத்தம் வந்தபிறகுதானே அவர்கள் இறந்தார்கள்?" என்றார்.

நன்கு படித்த வழக்கறிஞரும் பாராளுமன்ற உறுப்பினருமான சுமந்திரன், எதற்காக இப்போது வரலாற்றைத் திரித்துப் பேசுகிறார் என்று எனக்கு ஆச்சரியமாக இருந்தது. பிரபாகரன் 13ஆம் திருத்தத்தை ஏற்கவில்லை என்பதாலும், ஈழப்போரைத் தொடர்ந்து நடத்தினார் என்பதாலும் 2009 முள்ளிவாய்க்கால் படுகொலையோடு முடிந்த ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் இறந்தார்கள் என்ற உண்மையை அவர் ஏன் மறைக்கிறார்? அடுத்தடுத்த தலைவர்கள் ஒப்பந்தத்தை ஏற்கவில்லை, அமல்படுத்தவில்லை என்பதாலேயே ராஜீவ் - ஜே. ஆர் ஒப்பந்தம் தோல்வியடைந்தது என்று வாதிடலாம். ஆனால், உண்மை நம் கண் முன் நிற்கிறது - மாகாண சபைகள் உருவாக இந்தத் திருத்தம்தான் காரணம். கையெழுத்திட்ட இந்தியாவின் பாதுகாப்போடும் தமிழக நண்பர்களின் உதவியாலும், புலம்பெயர்ந்தோரின் முயற்சியாலும் இன்னும் சில அம்சங்களையும் நாம் பெற்றிருக்கலாம். கடந்த காலத்தைப் பற்றிப் பேசி நான் நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. சுமந்திரன் பேசியதைக் கேட்டு, அவர் தனது வாதங்களை எப்படிக் கட்டமைக்கிறார் என்பதை வாசகர்கள் புரிந்து கொள்ளவேண்டும் என்று வேண்டுகிறேன்.

சமீபத்திய அமெரிக்க பயணத்தின் போது, தமிழர்களின் நலனுக்கு உதவுவ தாக அமெரிக்கர்கள் உறுதியளித்ததாக சுமந்திரன் கூறினார். அமெரிக்க அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திய எல்லா இடங்களிலும் உள்ள இந்தியர்களுடன் பேசியதாகவும், இதைப்போலவே பெரிய பிரித்தானியாவிலும் தான் ஆதரவு திரட்டியதாகவும் கூறுகிறார். பிரிட்டன் தலைமையில் உலக நாடுகள் இணைந்து 2022இல் தமிழர்களுக்கு உதவும் என்று நம்புவதாகவும் கூறுகிறார். "பிரிட்டன் அதற்குத் தலைமை தாங்கக்கூடும். தலைமை தாங்கக்கூடும் என்றுதான் சொல்கிறேன். சின்னச் சின்ன நம்பிக்கை ஒளிக்கீற்றுகள் இருக்கின்றன." என்கிறார்.

"13ஆவது திருத்தத்திற்கு எதிரான இவரது சமீபத்திய போக்கை நிராகரிக்கிறோம். அதற்கு ஒரு நாள் முன்பாகத்தான் இந்த 13ஆவது திருத் தத்தை ஆதரித்து இவர் பாராளுமன் றத்தில் பேசினார்" என்று என்னிடம் தொலைபேசியில் கூறினார் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மூத்த தலைவர் ஒருவர்.

தமிழ் அரசு கட்சியில் ஒரு 'மும்மூர்த்திகள்' கூட்டு உருவாகியிருக்கிறது என்று சமீபத்தில் பேச்சு எழுந்தது. தலைமைப் பொறுப்பில் தொடர்வதற்குத் தனது மூப்பு தடையாக இருப்பதால் சுமந்திரனைத் தலைவராக்க சம்பந்தர் ஏற்றுக்கொண்டிருப்பதாகவும், மாவை வடக்கு மாகாண சபையின் முதல்வராக்கப்படுவார் என்றும் கூறப்படுகிறது. அவர்களது பெரும் முயற்சிகளில் வெற்றிபெற உளமார்ந்த வாழ்த்துகள். இந்த செயல்பாடுகள், திட்டமிடல்கள் மூலம் ஈழமக்களுக்கும் நன்மை கிடைக்கும் என்று நம்புகிறேன்.

தமிழ் ஈழ விடுதலைக் கூட்டமைப்பின் தலைவரும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் முக்கிய உறுப்பினருமான எனது நண்பர் செல்வம் அடைக்கலநாதனிடம் சமீபத்திய இந்த சர்ச்சைகள் பற்றிப் பேசினேன். "ஆம், சம்பந்தருக்கு அடுத்து, சுமந்திரன் தலைவராக வாய்ப்பு இருக்கிறது. ஆனால், தமிழ் அரசு கட்சிக்கு மட்டும்தான் அவரால் தலைவராகலாம். அதற்குப் பின்பு தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் தலைவராக அவர் முயற்சி செய்யலாம். ஆனால், நாங்கள் அதை அனுமதிக்கமாட்டோம். தமிழ் தேசிய கூட்டமைப்பிற்குக் கூட்டுத் தலைமைதான் தேவை என்று தெளிவுபடுத்தியிருக்கிறோம்" என்று கூறிய செல்வம், தமிழ் ஈழத்திற்கான மக்கள் விடுதலை அமைப்பின் தலைவர் சித்தார்த்தன் உள்ளிட்ட மூத்த தலைவர்களும் இந்த நிலைபாட்டுக்கே ஆதரவு தருகிறார்கள் என்றும் கூறினார்.

## தலைவர்களின் தவறுகளை விட வாசகர்களின் மௌனம் சமூகத்தை அழிக்கிறது?

மோடியுடனான சந்திப்பை சம்பந்தர் தவிர்த்தது இந்த மூவர் கூட்டணியைத் தவிர, பெரும்பாலான தமிழ்த் தலைவர்களுக்குப் பிடிக்கவில்லை என்றும் செல்வம் தெரிவித்தார். "130 கோடி மக்கள்தொகை கொண்ட நாட்டின் பிரதமர் நரேந்திர மோடி. அவர் நமக்கு உதவ விரும்புகிறார். அவரது அழைப்பைத் தவிர்க்கலாமா? டெல்லிக்குப் போகவில்லை என்று எடுத்த முடிவை

(14ஆம் பக்கம் பார்க்க)


# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வி னாத்தான்

நேரம் : 1 மணித்தியாலம்

**37.** குற்றிகள் சில ஒன்றன் மீதொன்று அடுக்கப்பட்ட வடிவம் அருகே தரப்பட்டுள்ளது. இதனை முன்னாலிருந்து பார்க்கும் போது கண்ணுக்குப் புலப்படாத குற்றிகளின் எண்ணிக்கை யாது?



(1) 8 குற்றிகள்

(2) 10 குற்றிகள்


(3) 12 குற்றிகள்


**38.** ஆங்கில எழுத்துக்களுக்கு எதிரே இடப்பட்டுள்ள சொற்களுக்கேற்பச் சரியான வாக்கியம் அமையும் ஆங்கில எழுத்து வரிசையைத் தெரிவு செய்க.


| | | | |
|---|---|---|---|
| A - பயன்படும் | B - பலவகையில் | C - மரங்களை | D - காப்பது |
| E - வளர்த்துக் | F - கடமையாகும் | G - நம் | H - எமக்குப் |

(1) H B A C G D F E (2) G C A B H E F D (3) H B A C E D G F

**39.** தாளில் இருந்து பென்சிலை எடுக்காமல் கீறக்கூடிய உரு எது?

(1) 

(2) 

(3) 

**40.** தரப்பட்ட கூற்றுக்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அதனை ஒழுங்குபடுத்தும் போது சரியாக அமையும் விடையை தெரிவு செய்க.

அ . தோமஸ் அல்வா எடிசன் 1847 ஆம் ஆண்டு அமெரிக்காவில் பிறந்தார்.
ஆ . என்றாலும் கூட எடிசனின் வளர்ச்சியில் பெற்றோர்கள் கடுமையாகப் பாடுபட்டனர்.
இ . அந்த ஆர்வத்தை வளர்க்கக் காரணமாக இருந்தவர் அவரது தந்தை தான்.
ஈ . அவரின் தந்தையார் சாதாரண வியாபாரி
உ . எடிசனுக்குப் புத்தகம் படிப்பதில் ஆர்வம் அதிகம்.
ஊ . எடிசன் ஒவ்வொரு புத்தகத்தையும் படித்து முடிக்கும் போது அவருக்கு பரிசு வழங்கிப் பாராட்டுவாராம்.

(1) அ, உ, ஆ, ஈ, ஊ, இ

(2) அ, ஈ, ஆ, உ, இ, ஊ

(3) அ, ஈ, உ, ஆ, இ, ஊ

**1.** பின்வரும் பந்தியை நன்றாக வாசிக்குக.

கடும் மழை காரணமாக எங்கும் வெள்ளம், மரங்கள் சாய்ந்து விழுந்துள்ளன. வீதிகளிலும் வெள்ளம் பாய்வதால் போக்குவரத்துத் தடைப்பட்டுள்ளது. சில வீடுகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. அங்குள்ள மக்கள் வெளியேறி பாடசாலைகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். அவர்களுக்குச் சமைத்த உணவு வழங்கப்படுகின்றது.

- கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் பந்தியிலிருந்து தெரிந்தெடுத்துப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

**(i)** **"அடைக்கலம்"** என்பதைக் குறிக்கும் சொல் எது? ................................................

**(ii)** **"வீதியிலும்"** என்பதன் பன்மைச் சொல்லை எழுதுக. ................................................

**(iii)** உயர்திணைப் பெயர்ச்சொல்லை எழுதுக. ................................................

**(iv)** **"கடும் மழை காரணமாக எங்கும் வெள்ளம்"** இவ் வாக்கியத்தில் உள்ள அடைமொழிச் சொல் எது?
................................................

**(v)** மக்கள் எங்கே தஞ்சம் புகுந்துள்ளனர்? ................................................

**(vi)** இறந்தகால பன்மை வினைச்சொல் ஒன்று எழுதுக. ................................................

**2.** **பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.**

**(i)** இவர் ............................................ கவிபாடும் வல்லமை பெற்றிருந்தார்.
( இளமையிலேயே, இழமையிலேயே )

**(ii)** பளபளவென மின்னும் ............................................ ஒரு தனியழகுதான்.
( தங்கப்பேளை, தங்கப்பேழை )


**3.** **பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் ( ✓ ) எனவும் பிழையாயின் ( ✕ ) எனவும் அடைப்பினுள் இடுக.**

**(i)** **"நீவிர்"** என்பது முன்னிலைப் பன்மைப் பெயர்ச்சொல் ஆகும். (   )

**(ii)** **"படிப்பான்"** என்பது உயர்திணைப் பன்மை எதிர்காலச்சொல் ஆகும். (   )

**(iii)** **"நீதிபதி"** என்பது இருபால் பொதுப்பெயர் ஆகும். (   )

## விடைகள்

| | | |
|---|---|---|
| **37.** | (2) | 10 குற்றிகள் |
| **38.** | (3) | H B A C E D G F |
| **39.** | (1) |  |
| **40.** | (2) | அ, ஈ, ஆ, உ, இ, ஊ |

| | | | |
|---|---|---|---|
| 1. | (i) | தஞ்சம் | ( 1 புள்ளி ) |
| | (ii) | வீதிகளிலும் | ( 1 புள்ளி ) |
| | (iii) | மக்கள் | ( 1 புள்ளி ) |
| | (iv) | கடும் | ( 1 புள்ளி ) |
| | (v) | பாடசாலைகளில் | ( 1 புள்ளி ) |
| | (vi) | பாதிக்கப்பட்டுள்ளன / புகுந்துள்ளனர் / விழுந்துள்ளன | ( 1 புள்ளி ) |
| 2. | (i) | இளமையிலேயே | ( 1 புள்ளி ) |
| | (ii) | தங்கப்பேழை | ( 1 புள்ளி ) |
| 3. | (i) | ( ✓ ) | ( 1 புள்ளி ) |
| | (ii) | ( ✕ ) | ( 1 புள்ளி ) |
| | (iii) | ( ✓ ) | ( 1 புள்ளி ) |

# சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதில் மதில்மேல் பூனையாக இலங்கை அரசு!

## அமைச்சரவைக் கூட்டத்திலும் முடிவு இல்லை

கொழும்பு, டிசெ.15

**நிதி நெருக்கடியைச் சமாளிப்பதற்காக சர்வதேச நாணய நிதியத்தை நாடும் விவகாரத்தில் இலங்கை அரசு 'மதில் மேல் பூனை' நிலைப்பாட்டிலேயே இருந்து வருகின்றது.**

தற்போதைய சூழ்நிலையில் சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதே சிறந்த வழியென அரசிலுள்ள ஒரு சிலரும், அவ்வாறானதொரு தேர்வுக்கு அரசு சென்றுவிடக்கூடாது என மற்றுமொரு தரப்பினரும் வலியுறுத்தி வருகின்றனர்.

சர்வதேச நாணய நிதியத்தால் முன்வைக்கப்படும் நிபந்தனைகளை நிறைவேற்ற முற்பட்டால் அது உள்நாட்டில் அரசியல் நெருக்கடிக்கு வழிவகுத்து, ஸ்திரமற்ற தன்மையை உருவாக்கும் என்பதே, 'வேண்டாம்' என வலியுறுத்தும் தரப்பின் கருத்தாக உள்ளது.

ஆனால் இந்தியா, ஜப்பான், சீனா உள்ளிட்ட நாடுகள்கூட இலங்கைக்குப் பாரிய தொகை கடன்களை வழங்குவதற்கு தயக்கம் காட்டும் நிலையில், சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதே ஒரே வழி எனவும், அவ்வாறு இல்லாவிட்டால் நெருக்கடி நிலை உருவாகும் எனவும் 'வேண்டும்' என வலியுறுத்தும் தரப்பினர் சுட்டிக் காட்டுகின்றனர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலும் ஐ.எம்.எப். விவகாரம் பற்றி ஆராயப்பட்டது. எனினும், இறுதி முடிவு எட்டப்படவில்லை.



நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச இந்த விடயம் தொடர்பில் கடும் குழப்பத்தில் உள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (இ)

## குடும்பஸ்தர் படுகொலை!

களுத்துறை, டிசெ. 15

களுத்துறை, மீகஹதென்ன பொலிஸ் பிரிவில் குடும்பஸ்தர் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த பிரதேசத்தை சேர்ந்த 35 வயது நபரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் படுகாயமடைந்த நபர் மீகஹதென்ன வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதிலும் அவர் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார்.

தனிப்பட்ட பகையே இந்தப் படுகொலைக்குக் காரணம் என்று பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய நபர் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவரைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (இ)

# பாராளுமன்ற அமர்வுகளை ஒத்திவைக்க காரணம் என்ன?

## கேள்வி எழுப்புகின்றது ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, டிசெ. 15

ஜனாதிபதி தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி பாராளுமன்ற அமர்வுகளை ஒத்திவைத்திருப்பது மக்கள் மத்தியில் சந்தேகத்தை தோற்றுவித்துள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார். ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைக் கூறினார்.

இதன்போது தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர், "பாராளுமன்ற அமர்வுகளை ஒத்திவைப்பதற்கான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி வெளியிட்டுள்ளார். அரசமைப்பின் பிரகாரம் பாராளுமன்ற அமர்வுகளை ஒத்திவைப்பதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு உள்ளது.

இருப்பினும் நள்ளிரவுடன் அமுலுக்கு வரும் வகையில் அவசரமாக பாராளுமன்ற அமர்வுகளை ஒத்திவைப்பதற்கான வர்த்தமானியை வெளியிட்டமையின் ஊடாக பாரிய சந்தேகம் எழுந்துள்ளது. இவ்வாறு



எதிர்வரும் ஜனவரி 18ஆம் திகதி வரை பாராளுமன்ற அமர்வுகளை ஒத்திவைப்பதற்கான காரணம் என்ன என மக்கள் வினவுகின்றனர்.

இந்த நடவடிக்கையின் ஊடாக பாராளுமன்றத்தில் கலந்துரையாடப்பட்ட பல விடயங்களுக்கான தீர்வைக் காண்பதில் காலதாமதமே ஏற்படும். அதேபோன்று பாராளுமன்ற உப குழுக்களின் விவகாரங்களில் கால தாமதம் ஏற்படும். விசேட காரணமொன்று இருப்பின் அது தொடர்பில் நாட்டுமக்களுக்கு வெளிப்படுத்தவேண்டியது ஜனாதிபதியின் பொறுப்பாகும்.

1.4 பில்லியன் டொலர் அந்நிய செலாவணி வருமானம் வீழ்ச்சி கண்டுள்ளது. அத்துடன், நாட்டின் பொருளாதாரம் பாரிய சவாலை எதிர்கொண்டுள்ளது. வாழ்க்கை செலவு அதிகரித்துள்ளது. பொருட்களின் விலையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. அதேபோல் நாட்டில் எரிவாயு அடுப்புக்கள் வெடித்தல் உள்ளிட்ட பல்வேறு பிரச்னைகள் இடம்பெற்றுள்ளன.

இந்நிலையில், பாராளுமன்ற அமர்வுகளை ஜனாதிபதி ஒத்திவைப்பதன் ஊடாக எதிர்பார்ப்பது என்ன?

நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி பாராளுமன்ற அமர்வுகளை ஒத்திவைத்தல் என்பது மக்கள் மத்தியில் சந்தேகத்தை தோற்றுவித்துள்ளது.

ஜனாதிபதியின் இந்தத் தீர்மானம், ஜனநாயகத்துக்கு விரோதமான செயற்பாடாகும். குறிப்பாக முக்கிய காரணங்கள் எதுவுமின்றி இவ்வாறாக அவசரமாக பாராளுமன்ற அமர்வுகள் ஒத்திவைத்துள்ளமைக்கான காரணம் பாராளுன்றத்தில் அரசுக்கு எதிராக எழும் எதிர்ப்பை மூடி மறைப்பதா என்ற கேள்வி எழுந்துள்ளது" - என்றார். (கே)



## 'பொன்னான பரிசு' நூல் வெளியீடு

மன்னார், டிசெ. 15

மன்னார், அடம்பனைச் சேர்ந்த 'கம்பிகளின் மொழி' பிரேம் எழுதிய 'பொன்னான பரிசு' நூல் வைபவ ரீதியாக வெளியீட்டு வைக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வு அதிபர் என்.நாகேந்திரராஜா தலைமையில் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அடம்பன் பண்ணையில் நடைபெற்றது.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோகராதலிங்கம் கலந்துகொண்டார். நூலாசிரியருடன் இணைந்து குறித்த நூலைச் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட வினோநோகராதலிங்கம் எம்.பி. மற்றும் விருந்தினர்கள் இணைந்து வைபவ ரீதியாக வெளியிட்டு வைத்தனர். (இ)

## முகக்கவசம் அணியாதவர்களுக்கு இனிமேல் கொரோனா பரிசோதனை

கொழும்பு, டிசெ. 15

முகக்கவசம் அணியாமல் வீதியில் நடமாடுபவர்களுக்குக் கொரோனா பரிசோதனை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாநகர எல்லைக்குட்பட்ட பகுதியிலேயே இதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்படி கொழும்பு மாநகர எல்லையில் முகக்கவசம் இன்றி நடமாடுபவர்கள் 'அன்டிஜன்ட்' பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளனர். (இ)

## வீழ்ந்துள்ள சுற்றுலாத்துறையை மீளக் கட்டியெழுப்ப நடவடிக்கை

கொழும்பு, டிசெ 15

இந்தியா, இங்கிலாந்து, ஜேர்மனி, பிரான்ஸ் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் இலங்கை சுற்றுலாத்துறை தொடர்பான விளம்பரப்படுத்தல்களை மேற்கொண்டு வருவதாக சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளர் சிறிபால ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

இந்த வருடத்தின் நவம்பர் மாதம் முதல், அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் வரையில் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்காக 273 மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

கொரோனா கொவிட்-19 காரணமாக வீழ்ச்சியடைந்துள்ள சுற்றுலாத்துறையை மீளக் கட்டியெழுப்பும் நோக்கில் குறித்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் சுற்றுலா அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார். (இ)

## நாட்டாமை தொழிலாளர் தள்ளுவண்டியால் புறக்கோட்டையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி

கொழும்பு, டிசெ. 15

கொழும்பு நகரில் விசேடமாக புறக்கோட்டை மற்றும் குறுக்கு வீதிகளில் நாட்டாமை தொழிலாளர்களின் வண்டிகள் (தள்ளு வண்டிகள்) ஒழுங்கின்றி பயணம் செய்வதன் காரணமாக புறக்கோட்டை பிரதேசத்தில் நடந்து செல்லும் மக்கள் மற்றும் ஓட்டோ, லொறி, வான் உரிமையாளர்கள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். அதனால் இது தொடர்பாக சரியான வழிமுறை ஒன்றை அதற்காக தயாரித்து மக்களின் சிரமத்தைக் குறைக்குமாறு



கொழும்பு மாநகர சபை உறுப்பினர் ரெங்கசாமி ஜெய்சங்கர், மாநகரப் போக்குவரத்து குழுவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பான விசேட குழுவால் நாட்டாமை வண்டிகள் தொடர்பில் கலந்துரையாடல் ஒன்று வாகனப் போக்கு வரத்து பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் புறக்கோட்டை போக்குவரத் துப் பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி, நாட்டாமை தொழிலாளர் சங்கத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் தள்ளு வண்டி உரிமையாளர்கள் சிலருடனான கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றுள்ளது.

இதன்போது பிரச்னைக்குத் தீர்வு காணும் வகையில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. (இ)

# இரண்டு தடுப்பூசிகளுக்கு கட்டுப்படாத ஒமைக்ரோன்

## தனியான தடுப்பூசி தேவையா? ஆராய்கிறார்கள் விஞ்ஞானிகள்

லண்டன், டிசெ. 15

ஒமைக்ரோன் புதிய வைரஸ் திரிபுக்கு எதிராக பைசர் மற்றும் அஸ்ட்ராசெனேகா இரண்டு தடுப்பூசிகள் குறைந்தளவு செயல்திறனையே வெளிப்படுத்துவதாக இங்கிலாந்து - ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

இரண்டு தடுப்பூசிகள் போட்டுக்கொண்டவர்கள் கூட ஒமைக்ரோன் தொற்றால் அபாயத்தை எதிர்கொண்டுள்ளனர் என கடந்த திங்கட்கிழமை வெளியிடப்பட்ட ஆய்வு முடிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒமைக்ரோனுக்கு எதிராக இரண்டு தடுப்பூசிகள் குறைந்தளவு செயல்திறனையே வெளிப்படுத்துவதால் இது தொற்று நோய் விரைவான அதிகரிப்புக்கு வழிவகுக்கும் எனவும் அவர்கள் எச்சரித்துள்ளனர்.

பைசர் மற்றும் அஸ்ட்ரா செனேகா இரண்டு தடுப்பூசிகளையும் போட்டுக்கொண்டவர்களிடம் இருந்து இரத்த மாதிரிகள் பெறப்பட்டு புதிய திரிபுக்கு எதிராக இவை எவ்வாறு செயலாற்றுகின்றன? என ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வில் டெல்டாவுடன் ஒப்பிடுகையில் ஒமைக்ரோனை செயலற்றதாக்குவதில் இரண்டு தடுப்பூசிகள் குறைந்தளவு செயல்திறனையே வெளிப்படுத்தியதாக ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் சுட்டிக்காட்டினர்.

இந்த ஆய்வு முடிவு ஒமைக்ரோனுக்கு எதிராக செயலாற்ற 3 ஆவது பூஸ்டர் தடுப்பூசியின் அவசியத்தை வலியுறுத்துகிறது.

இதேவேளை, ஒமைக்ரோனுக்கு எதிரான தடுப்பூசிகளின் செயல்திறன் குறித்து பல்வேறு ஆய்வுகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எனினும் ஒமைக்ரோன் வைரஸ் அதன் பாதிப்பு குறித்த இறுதியான முடிவொன்றுக்கு வர முடியாமல் விஞ்ஞானிகள் உள்ளனர். இந்த திரிபுக்கு எதிரான தடுப்பூசிகளின் செயல்திறன் குறித்தும் விஞ்ஞானிகளால் அறிவியல் ரீதியான இறுதி முடிவொன்றுக்கு இது வரை வர முடியவில்லை.

புதிய ஒமைக்ரோன் திரிபால் தொற்று நோயாளர் தொகை அதிக வேகமாக அதிகரிக்கின்றபோதும் பாதிக்கப்பட்டவர்கள் லேசான அறிகுறிகளையே வெளிப்படுத்துவதாக இதுவரையான தரவுகள் கூறுகின்றன.

இதுவரை ஒமைக்ரோன் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களிடையே ஒரேயொரு மரணமே பதிவாகியுள்ளது. இங்கிலாந்தில் ஒமைக்ரோன் தொற்று நோயாளி ஒருவர் இறந்ததைத் தவிர வேறெந்த பெரியளவிலான சம்பவங்களும் இதுவரை பதிவாகவில்லை.

இந்நிலையின் ஒமிக்ரோன் திரிபு அதன் தாக்கங்கள் குறித்து தொடர்ந்து ஆராயப்படுகிறது. இது குறித்து உறுதியான முடிவொன்றுக்கு வர இன்னும் சில வாரங்கள் ஆகலாம் என ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராசெனேகா தடுப்பூசியை உருவாக்கியவர்களில் ஒருவரான மருத்துவ விஞ்ஞானி தெரேசா லாம்பே தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள தடுப்பூசி கடுமையான நோய்வாய்ப்படல் மற்றும் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதில் இருந்து பாதுகாக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.

எனினும் ஒமைக்ரோனுக்கு எதிரான தனியானதொரு தடுப்பூசி தேவையா? என்பது குறித்து நாங்களும் ஏனைய மருந்து உற்பத்தியாளர்களும் ஆராய்ந்து வருகிறோம். தனியான ஒரு தடுப்பூசி தேவைப்பட்டால் அதனை விரைவாக உருவாக்க முடியும். அதற்கான வாய்ப்புக்கள் தற்போது உள்ளன எனவும் தெரேசா லாம்பே குறிப்பிட்டார். (அ)




# இந்தோனேஷியாவில் பெரும் நிலநடுக்கம்!

## சுனாமி எச்சரிக்கை விடுப்பு

ஜகார்த்தா, டிசெ. 15

இந்தோனேசியாவின் கிழக்குப் பகுதியில் (புளோரஸ் கடல் பகுதி) 7.4 ரிச்டர் அளவு கோலில், சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

புளோரஸ் தீவு அருகே ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தைத் தொடர்ந்து இந்தோனேசியாவில் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11:20 மணியளவில் புளோரஸ் கடலில் 76 கிலோமீற்றர் (47 மைல்) ஆழத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்தோனேசியாவின் புளோரஸ் தீவில் உள்ள மௌமரேக்கு வடக்கே 91 கிலோமீற்றர் (56 மைல்) தொலைவில் நிலநடுக்கம் ஏற்பட்டது.

இந்த ஆண்டு மே மாதம், இந்தோனேசியாவின் சுமத்ரா தீவின் வடமேற்கு கடற்கரையில் 6.6 ரிச்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டிருந்தமை நினைவு கூரத்தக்கது.

கடைசியாக 2004ஆம் ஆண்டு இந்தோனேசியாவில் நிலநடுக்கம் சுனாமியைத் தூண்டியது. டிசெம்பர் 26ஆம் திகதி, வடமேற்கு சுமத்ரா கடற்கரையில் ஏற்பட்ட 9.1 ரிச்டர் அளவிலான நிலநடுக்கம் இந்தோனேசியா, இலங்கை, இந்தியா, தாய்லாந்து மற்றும் 9 நாடுகளில் 230,000க்கும் அதிகமான மக்களின் உயிரை காவுகொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 2021ஆம் ஆண்டின் சிறந்த நபர் எலான் மஸ்க்!




நியூயோர்க், டிசெ.13

2021ஆம் ஆண்டின் சிறந்த நபர் எலான் மஸ்க் என ரைம்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

கௌரவமிக்கதாக கருதப்படும் ரைம்ஸ் பத்திரிகையின் அட்டைப் படத்தில் எலான் மஸ்க்கின் புகைப் படத்தை நிறுவனம் வெளியிட்டுள்ளது.

டெஸ்லா, ஸ்பேஸ் எக்ஸ், ஸ்டார்லிங்க், நியூராலிங், கிரிப்டோகரன்சி முதலீடு என தான் தடம் பதித்த அனைத்து துறைகளிலும் முத்திரை பதித்து வரும் எலான் மஸ்கை 2021 ஆம் ஆண்டின் சிறந்த நபர் என ரைம்ஸ் பத்திரிக்கை புகழாரம் சூட்டியுள்ளது.(அ)

# சுமந்திரன் எதற்காக...

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாங்கள் ஏற்கவில்லை. இதை, இந்திய உயர் ஸ்தானிகரிடமும் தெரிவித்தோம்” என்கிறார்.

ஒரு புதிய அரசியலமைப்புச் சட்டம் தயாராகிவருவதாக கோட்டாபய ராஜபக்ஷ கூறியிருக்கும் நிலையில், அடுத்த சில மாதங்கள் கடுமையானவையாக இருக்கலாம். தலைவர்கள் கைகோத்துக்கொண்டு இருப்பதற்கு பதிலாக, ஒருவரை ஒருவர் தாக்கும் காட்சிகளைத் தமிழ் மக்கள் பார்க்கிறார்கள். இது புதிதல்ல. ஈழப்போரின்போது கூட, சிங்கள இராணுவத்தால் கொல்லப்பட்டதை விட, தமிழ்த் தலைவர்கள் தமிழ் சொந்தங்களால் கொல்லப்பட்டதுதான் அதிகம். ஆனால், அதை நாம் ஒப்புக்கொள்ள மாட்டோம். நமது வரலாற்றின் இரத்தம் தோய்ந்த இந்தப் பக்கங்களை நாம் வசதியாக மறந்துவிடுகிறோம்.

இங்கு ஒரு முட்டாள்தனமான கேள்வியையும் எழுப்ப விரும்புகிறேன். தமிழ் தேசிய கூட்டமைப்பின் சில சிறப்பான தலைவர்கள், சிங்கள அரசியல் தலைவர்களுடன் நல்ல நட்புறவில் இருக்கிறார்கள். அதில் தவறில்லை. சொல்லப்போனால், இலங்கையின் சிறு தீவில் அமைதியாகவும் செழிப்பாகவும் ஒன்றிணைந்து இருக்க வேண்டிய இந்த இரு குழுக்களும் நட்போடு இருப்பதை நாம் வரவேற்கவேண்டும். கொழும்பில் உள்ள இந்தத் தலைவர்களிடமிருந்து தங்களுக்காக சில சலுகைகளைப் பெறவும் தமிழ்த் தலைவர்கள் தயங்குவதில்லை. அதிலும் தவறில்லை, அரசியல் என்றால், தன் தேவைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பது தானே! இப்போது என் கேள்வி - 'செல்வாக்குள்ள' இந்தத் தலைவர்கள், அந்த செல்வாக்கைப் பயன்படுத்தி ஏன் தமிழர்களுக்கு நீதி பெற்றுத் தரக்கூடாது? சொந்த விருப்பு வெறுப்புகளைப் பார்ப்பதற்கு பதிலாக, நீண்டகாலத் தீர்வுகளைக் கண்டடைவதற்கு ஏன் முயற்சி செய்யக் கூடாது? மக்கள் ஏன் இந்தக் கேள்வியைத் தலைவர்களிடம் கேட்பதில்லை?

'அமெரிக்கர்கள் ஏன் திடீரென்று நம்மீது அக்கறை காட்டுகிறார்கள்?' என்ற கேள்வியும் எழுகிறது. தெற்கு சீனக் கடல், இந்தியப் பெருங்கடல் மற்றும் பிற இடங்களில் வியாபிக்க நினைக்கும் சீனாவைத் தடுக்க விரும்பும் அமெரிக்கா, அதற்காக இலங்கைத் தமிழர்களிடம் அக்கறை காட்டுகிறதா? ஆப்கானிஸ்தான் மக்களுக்கு நேர்ந்த கதியை நாம் நினைத்துப் பார்க்கவேண்டாமா? தமிழ் பிரச்னைகளைத் தீர்க்க முயற்சி செய்த இந்தியா, 1200 அமைதிப்படை வீரர்களையும், முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியையும் இழந்தது, துரோகிப்பட்டம் கட்டிக் கொண்டது, இதைத்தவிர இந்தியாவுக்கு என்ன கிடைத்தது?

எனது 43 ஆண்டுகால பத்திரிகை அனுபவத்தில் எனக்கு உச்சகட்ட வலி, கோபம், ஆதங்கத்தைத் தருவது என்னவென்றால், ஆட்சியாளர்கள் மற்றும் அதிகாரம் படைத்தவர்களின் ஊழல், நேர்மையின்மை, அரசியல் ஏமாற்றுவேலை ஆகியவற்றைப் பற்றி வாசகர்கள் கண்டும் காணாமல் இருப்பதுதான். தலைவர்களின் தவறுகளை விட, வாசகர்களின் மௌனம்தான் சமூகத்தை ஆழமாக அழிக்கிறது. •

# தலாய் லாமாவுக்கு விசுவாசமாக இருந்த திபெத் எழுத்தாளருக்கு 10 ஆண்டு சிறை!

பீஜிங், டிசெ.15

நாடு கடத்தப்பட்ட ஆன்மீகத் தலைவர் தலாய் லாமாவுக்கு விசுவாசத்தை வெளிப்படுத்தியதாக அறியப்பட்ட திபெத்திய எழுத்தாளரும் கல்வியாளருமான கோ ஷெராப் கியாட்சோவுக்கு, திபெத்திலுள்ள சீன நீதிமன்றம் 10 ஆண்டு சிறைத்தண்டனை விதித்துள்ளதாக ரேடியோ ப்ரீ ஆசியா தெரிவித்தது.

இதற்கு முன்னதாக கோ ஷெராப் கியாட்சோ, சீன ஆட்சியின் கீழ் வாழும் திபெத்தியர்கள் மீதான கட்டுப்பாடுகளை விவரிக்கும் புத்தகங்களையும் கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

மேலும், சிச்சுவானின் நகாபாவில் (சீன மொழியில், அபா) திபெத்திய தன்னாட்சி மாகாணத்திலுள்ள கிர்தி மடாலயத்தை சேர்ந்த 46 வயதான துறவி கோ ஷெராப் கியாட்சோ, ஒக்ரோபர் 26,



2020 அன்று, சிச்சுவானின் தலைநகர் செங்டுவில் மாநில பாதுகாப்பு முகவர்களினால், அறியப்படாத குற்றச்சாட்டின் பேரில் தடுப்பு காவலில் வைக்கப்பட்டார்.

இதற்கிடையே, கியாட்சோ விரைவில் திபெத்தின் பிராந்திய தலைநகரான லாசாவுக்கு அருகிலுள்ள சிறைக்கு மாற்றப்படுவார் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்நிலையில் அவர் எந்த குற்றச்சாட்டின் பேரில் தண்டிக்கப்பட்டார் என்பது பற்றிய விவரங்கள் எதுவும் கிடைக்கவில்லை என ரேடியோ ப்ரீ ஆசியா கூறியுள்ளது.

மேலும் புலம்பெயர்ந்து வாழும் திபெத்திய அறிஞர் ஒருவர் ரேடியோ ப்ரீ ஆசியாவுக்கு கூறியுள்ளதாவது:

“சீன ஆட்சியின் கீழ் கருத்துச் சுதந்திரத்தின் மீதான கட்டுப்பாடுகளை விவரிக்கும் புத்தகங்கள் மற்றும் கட்டுரைகளை எழுதிய கியாட்சோ, திபெத்திய மொழி, மதம் மற்றும் கலாசாரத்தைப் பாதுகாக்க வாதிடும் திறந்த மனதுடைய நபர்.

அத்துடன் அவரது 10 ஆண்டுகால சிறைத்தண்டனையைப் பற்றி கேள்விப்படுவது வருத்தமான செய்தி. இந்த விடயத்தை உடனடியாக கவனிக்குமாறு ஐக்கிய நாடுகள் சபை, உலகெங்கிலும் உள்ள அரசாங்கங்கள் மற்றும் சர்வதேச சமூகத்தை நான் அழைக்க விரும்புகிறேன்” - என்றார். (அ)

ஈழநாடு



## எல். பி. எல். இருபது - 20 தொடர்:

# யாழ்ப்பாணம் கிங்ஸ் அடுத்த சுற்றுக்கு தகுதி

கொழும்பு, டிசெ. 15

தம்புள்ளை அணியை 7 விக்கெட்களால் வீழ்த்திய யாழ்ப்பாணம் அணி அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளது. யாழ்ப்பாணம் அணி தற்போது 10 புள்ளிகளுடன் முதலிடத்தில் இருக்கின்றது.

எல். பி. எல். இருபது - 20 போட்டியின் இரண்டாவது தொடர் கொழும்பு ஆர். பிரேமதாஸ மைதானத்தில் நடக்கிறது. நேற்று முன்தினம் இரவு நடந்த போட்டியில் யாழ்ப்பாணம் கிங்ஸ், தம்புள்ளை ஜியான்ட்ஸ் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற யாழ்ப்பாணம் அணி களத்தடுப்பைத் தெரிவு செய்தது. யாழ்ப்பாணம் அணியின் சுழல்ப ந்துவீச்சுக்கு தாக்குப்பிடிக்க முடியாத தம்புள்ளை அணி 14.1 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 69 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

எல். பி. எல். தொடர் வரலாற்றில் ஓர் அணி பெற்ற மிகக் குறைந்த ஓட்ட எண்ணிக்கை இதுவாகும். பில் சால்ட் 21, தரிந்து ரட்நாயக்க 14 ஓட்டங்களைப் பெற்றனர். இவர்கள் மட்டுமே இருவரிசை இலக்கத்தில் ஓட்டங்களைப் பெற்ற வீரர்களாகவும் இருந்தனர்.



யாழ்ப்பாணம் அணி சார்பில் பந்துவீசிய சதுரங்க டீ சில்வா 4 விக்கெட்களையும், மஹேஷ் தீக்சன 3 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

70 ஓட்டங்கள் என்ற இலகுவான இலக்கைத் துரத்திய யாழ்ப்பாணம் அணி 3 விக்கெட்களை இழந்து 9.2 ஓவர்களில் 71 ஓட்டங்களைப் பெற்றது.

தொடக்க வீரரான உபுல் தரங்க 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ஹசரங்க டி சில்வா 18 பந்துகளில் 5 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 37 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார்.

அவிஸ்க பெர்னாண்டோ 22 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றார்.

தம்புள்ளைக்காக பந்துவீசிய இம்ரான் தஹீர் 2 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

போட்டியின் நாயகனாக சதுரங்க டீ சில்வா தெரிவானார். (ஐ)




## இந்தியாவுடனான டெஸ்ட்; குயின்ரன் டி கொக் விலகல்!

கேப்டவுன், டிசெ. 15

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இருந்து தென்னாபிரிக்க வீரர் குயின்ரன் டி கொக் விலகியுள்ளார்

தென்னாபிரிக்க அணி தனது சொந்தமண்ணில் இந்தியாவுக்கு எதிரான மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கவுள்ளது.

முதல் டெஸ்ட வரும் 26ஆம் திகதி செஞ்சூரியனில் நடக்கவுள்ளது. இந்தப் போட்டியில் விக்கெட் காப்பாளராக குயின்ரன் டி கொக் இடம்பெற்றிருந்தார்.

குயின்ரன் டி கொக்கின் மனைவி சாஷாவுக்கு புத்தாண்டு தொடக்கத்தில் முதல் குழந்தை பிறக்கவுள்ளது. இதற்காக கொரோனா பாதுகாப்பு வளையத்தில் இருந்து குயின்ரன் டி கொக் வெளியேறினால், மீண்டும் உடனடியாக இணைவதில் சிக்கல் ஏற்படும். இ

தையடுத்து இந்தியாவுக்கு எதிராக கடைசி இரு டெஸ்டில் இருந்து குயின்டன் டி கொக் விலகியுள்ளார். இவருக்குப் பதில் கைல் வெரேன், ரியான் ரிக்கிள்டன் என இருவரில் ஒருவர் இந்தியாவுக்கு எதிராக களமிறங்க உள்ளனர்.

## தென்னாபிரிக்க தொடர்; ரோஹித் சர்மா விலகல்!

கொழும்பு, டிசெ. 15

தென்னாபிரிக்காவுக்கு எதிரான மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இருந்து ரோஹித் சர்மா விலகியுள்ளார் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை உறுதிபடுத்தியுள்ளது.

ரோஹித் சர்மாவுக்கு பதிலாக 18 பேர் கொண்ட இந்திய அணியில் பிரியங்க் பஞ்சால் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார். மும்பையில் ஞாயிறன்று முன்னெடுக்கப்பட்ட பயிற்சி நடவடிக்கையின்போது ரோஹித் சர்மாவின் இடது தொடை தசையில் காயம் ஏற்பட்டது.

இதன் காரணமாக அவர் தென்னாபிரிக்காவுடனான மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இருந்து விலகியுள்ளார். ஒருநாள், இருபது - 20 அணிகளின் தலைவராக உள்ள ரோஹித் சர்மா டெஸ்ட் அணியின் உப தலைவராகவும் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.






## கிரிக்கெட் அணிகளின் ஆலோசகராக மஹேல!

கொழும்பு, டிசெ. 15

இலங்கை அணியின் முன்னாள் தலைவர் மஹேல ஜெயவர்த்தன 2022 ஜனவரி முதலாம் திகதி முதல் ஒரு வருட காலத்திற்கு தேசிய கிரிக்கெட் அணிக்கான பயிற்றுவிப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜெயவர்த்தனவின் புதிய நியமனத்தின் கீழ், அவர் தேசிய ஆண்கள் அணியைத் தவிர அனைத்து தேசிய அணிகளின் கிரிக்கெட் பிரிவின் பொறுப்பாளராக இருப்பார்.

இலங்கை கிரிக்கெட்டின் தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவுடன் கலந்தாலோசித்து, இலங்கை கிரிக்கெட் நிர்வாகக் குழுவால் மஹேல ஜெயவர்த்தன இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். (ஐ)

## ஐ.சி.சியின் சிறந்த வீரர் விருது; டேவிட் வோர்ணர், ஹேலேக்கு!

டுபாய், டிசெ. 15

சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ. சி. சி.) நவம்பர் மாதத்துக்கான சிறந்த வீரருக்கான விருதை அவுஸ்திரேலியாவின் டேவிட் வோர்ணரும், சிறந்த வீராங்கனைக்கான விருதை மேற்கிந்தியத் தீவுகளின் ஹேலே மத்தியூஸூம் வென்றனர்.

அவுஸ்திரேலியா முதல் முறையாக இருபது - 20 உலகக் கிண்ணத்தை வெல்வதற்கு முக்கியமாக பங்களிப்பு செய்ததன் அடிப்படையில் அந்த அணியின் தொடக்க வீரரான வோர்ணருக்கு இந்த விருது

வழங்கப்பட்டுள்ளது. உலகக்கிண்ணப் போட்டியின் சிறந்த வீரராகவும் வோர்ணர் தெரிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த விருதை வோர்ணர் பெறுவது இதுவே முதன்முறையாகும்.

இதேசமயம், பாகிஸ்தான் அணிக்கு எதிரான ஒருநாள் தொடரில் சகலதுறையிலும் சிறப்பாக செயல்பட்ட மேற்கிந்தியத் தீவுகளின் ஹேலே மத்தியூஸூக்கு விருது வழங்கப்பட்டுள்ளது. இது அவரின் இரண்டாவது விருதாகும்.

இவர், நவம்பர் மாதத்தில் மட்டும் 141 ஓட்டங்களை விளாசியதுடன், 9 விக்கெட்களையும் கைப்பற்றியிருந்தார். அத்துடன், பாகிஸ்தானுக்கு எதிரான தொடரின் தொடர் நாயகியாகவும் தெரிவாகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# மரண அறிவித்தல்

தோற்றம்
08 - 03 - 1961



மறைவு
11 - 12 - 2021

## திருமதி பற்குணநாதன் தெய்வகுமாரி (குமாரி)

### நாயன்மார்கட்டு - யாழ்ப்பாணம்

இல.21, செம்மணி வீதி, நாயன்மார்கட்டைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி பற்குணநாதன் தெய்வகுமாரி அவர்கள் 11.12.2021 சனிக்கிழமை அன்று அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - மனோன்மணி தம்பதியரின் மூத்த புதல்வியும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும், கணபதிப்பிள்ளை பற்குணநாதன் அவர்களின் அன்பு மனைவியும், சாந்தா (யாழ்ப்பாணம்), சுகிர்தன் (சுகிர் - காணாமலாக்கப்பட்டவர் - 2007), நிரோஜினி (நந்தினி - லண்டன்), கோபிகிருஷ்ணா (சுவிற்ஸர்லாந்து), மதன்குமார் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், பாலேந்திரா (ஸ்ரீவிக்னேஸ்வரா ஸ்ரோர்ஸ் - யுனிலிவர் டிஸ்ரிபியூட்டர்ஸ் விற்பனைப் பிரதிநிதி - சாவகச்சேரி), ஸ்ரீதரன் (லண்டன்) ஆகியோரின் மாமியாரும், அமரர். தெய்வேந்திரன் (இத்தாலி), அமரர் தர்மினி (யாழ்ப்பாணம்), கஜேந்திரன் (வவுனியா), சுமதினி (யாழ்ப்பாணம்), யோகேந்திரன் (வவுனியா) ஆகியோரின் அன்பு சகோதரியும், அமரர் விஸ்வலிங்கம், சபாரட்ணம் (அனலைதீவு), சின்னத்துரை, தில்லைச்சிவம் (பிரான்ஸ்) ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும், அழகேஸ்வரி, சாராதாம்பிகை, ரவீந்திரநாதன், கணேசநாதன், பாபு (அத்தியடி), பத்மா (பிரான்ஸ்), புவனேஸ்வரி (இத்தாலி), இராசலட்சுமி (வவுனியா), ஹரிகரன் (இந்தியா), தயாளரூபா (வவுனியா) ஆகியோரின் அன்பு மைத்துனியும், அமரர் கனகசிங்கம், புண்ணியசிங்கம், லோகசிங்கம், தனபாலசிங்கம் ஆகியோரின் அன்பு மருமகளும், சிரோன்மணி (கனடா), தவமணி (மைனா - கனடா), அமரர் நவமணி (குஞ்சுகிளி), அமரர் ருக்மணி, ஜெயமணி ஆகியோரின் பெறாமகளும், வளர்மதி, சிந்துமதி, ஜெயசங்க, வஜனிகா, கோகுலன் ஆகியோரின் பெரியதாயாரும், காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு, இந்திராணி (வவுனியா தெற்கிலுப்பைக்குளம்), சண்முகரத்தினம், கம லாம்பிகை (தங்கோடை காரைநகர்) ஆகியோரின் சம்பந்தியும், கெவின், கனியமுதன், சங்கீதன், சரணுகா, கலைக்குமரன், லேக்கா, விதுலன், தனுசிகன், சுபதா, காவியா. துளசி ஆகியோரின் அன்பு மாமியும், டேனுகா (லண்டன்), தக்ஷிகா (லண்டன்), பானுஜா (யாழ்ப்பாணம்), தனுசிகன் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.12.2021) வியாழக்கிழமை அன்று பிற்பகல் 1.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம்செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
**கோபிகிருஷ்ணா (மகன்) - 0041795587477, நிரோஜினி (மகள்) - 00447951729064, மதன்குமார் (மகன்) - 0061409899481, பாலேந்திரா (மருமகன்) - 0762999527, சாந்தா (மகள்) - 0778737087, 0772399527, பற்குணநாதன் (கணவர்) - 0775187572, பாபு (மைத்துனர்) - 0776592066**

தகவல் :
**குடும்பத்தினர்.**

முகவரி :
**இல. 21, செம்மணி வீதி,
நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்.**

## பசப்பு வார்த்தை...

அம்பாறை மாவட்டத்தில் பாண்டிருப்பு பகுதியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது: -

"தமிழர் தாயகத்தில் இடம்பெறுகின்ற பௌத்தமயமாக்கல், சிங்கள மயமாக்கல் போன்ற செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்தாவிடின் தமிழர் தேசத்தின் இருப்பை நாங்கள் பாதுகாக்க முடியாது என்பதை மக்கள் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

இவ்வாறான விடயங்கள் தடுத்து நிறுத்தப்பட வேண்டுமாயின் தமிழர் தேசத்தின் இறைமை என்பது அங்கீகரிக்கப்பட வேண்டும்.

தமிழர்களின் சுயநிர்ணய உரிமை போன்று ஒரு சுயாட்சி எட்டப்பட வேண்டும்.இவ்வாறு இல்லாமல் வெறுமனே வடக்கு - கிழக்கை இணைப்பதன் ஊடாக மாத்திரம் இந்த குடியேற்றங்களையோ அல்லது பௌத்த மயமாக்க விடயங்களையோ தடுத்து நிறுத்த முடியாது.

ஏனெனில் அதிகாரம் முழுவதும் அவர்களது (அரசு) கைகளிளே உள்ளது. அதே வேளை, வடக்கு - கிழக்கு இணைக்கப்பட்டிருந்தாலும் அங்கு ஆளுநருக்குத் தான் அதிகாரம்.

அதேபோன்று அந்த ஆளுநருக்குக் கீழுள்ள உத்தியோகத்தர்கள் ஆளுநரின் கட்டளைப்படிதான் நடப்பார்கள். மக்களால் தெரிவு செய்யப்பட்ட சபையில் கூட முதலமைச்சரின் செயலாளரையும் ஆளுநர்தான் நியமிப்பார்.

அங்கே சகல கட்டுப்பாடுகளும் ஆளுநரின் கீழ்தான் இருக்கும். ஆகவே, மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக பல்வேறு கருத்துக்களைக் கூற முடியும்.

ஒற்றையாட்சிக்குள் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக ஒருபோதும் சிங்கள மயமாக்கத்தையோ - பௌத்த மயமாக்கத்தையோ தடுக்க முடியாது.

இது 1987 - 1988 ஆண்டுகளில் இருந்து மாகாண சபை முறைமை உருவாக்கப்பட்ட நாளில் இருந்து நடைமுறையில் தான் இருக்கின்றது. இந்தச் சபை இணைந்தும் இருந்தது.

குடியேற்றம் அந்தவேளையிலும் இடம்பெற்றிருந்தது. அப்போது ஆயுதப் போராட்டத்தால் குடியேற்றங்கள் தடுக்கப்பட்டுக் கொண்டிருந்ததே தவிர இந்த மாகாண சபையின் நிர்வாகத்தின் ஊடாக கட்டுப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இது தான் உண்மையான விடயம்.

சாணக்கியன் எம்.பி. மக்களை ஏமாற்றி வருகின்றார். என்னைப் பொறுத்தமட்டில் அவர்கள் தேர்தல் காலங்களில் பல வாக்குறுதிகளை வழங்கி வந்தமை வரலாறு.

2015 ஆண்டு எமக்குக் கடைசி சந்தர்ப்பம் ஒன்றைத் தாருங்கள் என்று கூறினார்கள். அதாவது வடக்கு - கிழக்கு இணைந்த தாயகத்தில் ஒரு சமஷ்டி தீர்வைப் பெற்றுத்தருவோம் என்றெல்லாம் கூறினார்கள்.

அதேபோன்று 2016ஆம் ஆண்டு இறுதிக்குள் போர்க்குற்றவாளிகளை சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்துவோம் என்று கூறினார்கள்.

மக்கள் அதனை நம்பி பெருவாரியாக வாக்குகளை இவர்களுக்கு வழங்கி இருந்தார்கள். வென்று மறு வாரமே சுமந்திரன் எம்.பி. சர்வதேச விசாரணை முடிந்து விட்டது என்று கூறினார்.

ஜெனிவாக்குச் சென்று உள்ளக விசாரணைக்கு வாய்ப்புப் பெற்றுக் கொடுத்தார்கள். இப்படி இவர்கள் தமது ஏமாற்றுக்களைத் தேர்தலை மையப்படுத்தி செய்கின்றார்கள்.

இவர்களது இவ்வாறான நாடகங்களை மக்களும் அறிவார்கள். முழுக்க முழுக்க ஏமாற்றும் விடயங்களே இவர்களிடம் உள்ளன.

மக்கள் இவர்களது பசப்பு வார்த்தைகளை நம்பி ஏமாந்துவிடக்கூடாது என்று கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்" - என்றார். (இ)

## யாழ். மாநகர...

சபையின் வரவு - செலவுத் திட்டத்தை ஆதரிப்பதா எதிர்ப்பதா என்று முக்கிய கட்சிகள் நேற்றுக் கூடி ஆராய்ந்தன.

16 உறுப்பினர்களை கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சேர்ந்த மாநகர சபை உறுப்பினர்களின் கூட்டம் நேற்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் அலுவலகத்தில் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் வரவு - செலவு திட்டத்தை ஆதரிப்பதில்லை என்ற முடிவை உறுப்பினர்கள் ஏகமனதாக எடுத்தனர் என்று அந்தக் கட்சியின் வட்டாரங்களிலிலுருந்து அறிய முடிந்தது.

மாநகர முதல்வர் உட்பட 13 உறுப்பினர்களை கொண்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் இரு அணிகளாக ஏற்கனவே பிளவுண்டுள்ளனர். இதில் 10 உறுப்பினர்கள் மணிவண்ணன் பக்கம் உள்ள நிலையில், 3 உறுப்பினர்கள் அவர்கள் போட்டியிட்ட அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் தலைமையின்கீழ் இயங்குகின்றனர். இவர்கள் நேற்று கட்சியின் தலைமையுடன் பேசினர். இந்நிலையில், நேற்றைய தினம் பத்திரிகையாளர்களை சந்தித்த அந்தக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், "தமது நிலைப்பாடு நாளை (இன்று) வெளிப்படுத்தப்படும்", என்று கூறினார். எனினும், உட்கட்சி வட்டாரங்களின் தகவலின்படி வரவு - செலவு திட்டத்தை எதிர்க்கும் முடிவிலேயே உள்ளதாக அறியமுடிந்தது. எனினும், இந்தத் தகவலை உறுதிப்படுத்த முடியவில்லை.

இதேவேளை, 10 மாநகர உறுப்பினர்களை கொண்ட ஈ. பி. டி. பி. கட்சியும் இந்த விடயம் தொடர்பில் கூடி ஆராய்ந்தது. இந்தக் கூட்டத்தில் ஒரு பகுதியினர் வரவு - செலவு திட்டத்தை ஆதரிப்பதாகவும், இன்னொரு பகுதியினர் எதிர்ப்பதாகவும் கூறினர். கூட்டத்தின் முடிவுவரை இந்த இழுபறி நிலை நீடித்தது. எனினும், எதிர்க்கும் முடிவை வெளியிட்ட உறுப்பினர்கள் வாக்களிப்பில் பங்கேற்பதில்லை என்று முடிவு செய்தனர் என்று அறியவருகின்றது. இதனிடையே அந்தக் கட்சியின் உறுப்பினர் யோகேஸ்வரி பற்குணராஜா மாவட்டத்தில் இல்லாமையால் இன்றைய கூட்டத்தில் பங்கேற்க மாட்டார் எனத் தெரிகிறது.

இதேவேளை, 3 உறுப்பினர்களைக் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சியும், 2 உறுப்பினர்களை கொண்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஓர் உறுப்பினரைக் கொண்ட தமிழர் விடுதலை கூட்டணியும் நேற்றிரவு இந்த செய்தி எழுதப்படும் வரை தமது முடிவை அறிவிக்கவில்லை. எனினும், ஐக்கிய தேசியக் கட்சி எதிர்த்து வாக்களிக்கும் என்று அந்தக் கட்சியின் வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

## மாவீரர் நாள்...

பாலகிருஸ்ணன் ரதிகரன் என்ற 28 வயது இளைஞனுக்கே ஓராண்டின் பின்னர் பிணை கிடைத்துள்ளது.

குறித்த இளைஞன், மாவீரர் தினத்தை முன்னிட்டு, கவிதை ஒன்றை தமது 'பேஸ்புக்' பக்கத்தில் பதிவேற்றியமைக்காக, கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் திகதி பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு, திருகோணமலை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், சம்பவம் தொடர்பான வழக்கு, திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகம் இளஞ்செழியன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதன்போது, குறித்த இளைஞனை ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் செல்ல அனுமதியளித்தார் நீதிபதி. (ஐ)

## ம. உ. ஆணைக்...

சிங்க நியமிக்கப்பட்டுள்ளார். அத்துடன், ஆணைக்குழுவின் உறுப்பினர்களில் ஒருவராக வண. களுபஹன பியரத்ன தேரரும் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சிங்கப்பூரில் தங்கியுள்ள நிலையில், தனது அறிவிப்பை ஊடக செயலர் கிங்ஸ்லி ரத்நாயக்க மூலம் அறிவித்துள்ளார். (ஐ)

## சுமந்திரனின்...

ரெலோ தலைமையில் கூடிப் பேசிய தமிழ் பேசும் கட்சிகள் இன்று சுமந்திரனின் நிலைப்பாட்டுக்கு வந்துள்ளன.", என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

நேற்று கொக்குவிலில் உள்ள கட்சித் தலைமை அலுவலகத்தில் செய்தியாளர்களை சந்தித்தபோதே அவர் இதனைக் கூறினார்.

இதன்போது, சமஷ்டி தீர்வை அடைவதற்கான முதல் படி 13ஆம் திருத்தத்தை ஏற்றுக்கொள்வதே என்று ரெலோவின் அழைப்பின்பேரில் கூடிய தமிழ் பேசும் கட்சிகள் கூறுகின்றன. ஆனால், ஒற்றையாட்சி கட்டமைப்புக்குள் தமிழ் மக்களுக்கான தீர்வை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

இந்தியாவின் வெளிவிவகாரச் செயலர் ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லா எம்மை சந்தித்த போது, அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து 13ஆம் திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு கோரிக்கை விடுக்குமாறே கூறினார். இந்தியா கூறுவது போல் ஒற்றையாட்சிக் கட்டமைப்புக்குள் நாம் தீர்வை ஒருபோதும் ஏற்கமுடியாது என்பதை நாம் அவருக்கு தெரிவித்து விட்டோம்.

இன்றிருக்கும் நிலையில், நாம் ஒற்றையாட்சிக் கட்டமைப்புக்குள் எந்தத் தீர்வையும் ஏற்கமுடியாது. 13ஆம் திருத்தத்தை ஏற்பது தொடர்பில் கோரிக்கை விடுப்பதை விடுத்துவிட்டு, ஒற்றையாட்சிக்குள் அல்லாத உச்ச அதிகாரப் பகிர்வை கோருவதற்கு இப்போதுள்ள நிலைமையே பொருத்தமானது. இதுதான் இப்போது செய்யவேண்டியது.

சுமந்திரன் 13 வருடங்களாக 13ஆவது திருத்தச் சட்டம் இனப் பிரச்னைத் தீர்வுக்கு ஓர் ஆரம்பப்புள்ளி என்று கூறினார். ஆனால், இப்போது அவர் அதை ஏற்கவில்லை. வெளிநாடுகளுக்கு போய் வந்த பின்னர் - அங்கிருப்பவர்களை சந்தித்த பின்னர் - வெளிநாட்டில் ஓய்வெடுத்த பின்னர் அவர் முன்னேறியுள்ளார். அவர் 13ஆம் திருத்தத்தை தீர்வாக வலியுறுத்துவதில்லை. ஆனால், ரெலோவின் அழைப்பின்பேரில் கூடியுள்ள தமிழ் பேசும் கட்சிகள் இன்று அவரின் பழைய நிலைப்பாட்டுக்கே வந்துள்ளன - என்றார். (ஐ)

## தமிழ் மொழிக்கு...

பினர் சி. சிறீதரன் கூட்டத்தைப் புறக்கணித்து வெளியேறினார்.

"நூற்றுக்கு நூறு வீதம் தமிழர்கள் வாழும் இந்த வட மாகாணம் சார்ந்த கூட்டத்திலே நீங்கள் ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் பேசுவதால் எங்களால் கிரகித்து பதில் வார்த்தைகளைச் சொல்ல முடியவில்லை. ஆகவே, நான் இந்த கூட்டத்தில் இருந்து வெளியேறுகிறேன்", என்று கூட்டத்திலிருந்து வெளியேறிய பின்னர் பத்திரிகையாளர்களிடம் சிறீதரன் கூறினார்.

மேலும், "வடக்கு மாகாண சபையின் கூட்டம் ஆளுநர் தலைமையில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்திற்கு சென்றிருந்தபோது பாராளுமன்ற உறுப்பினர்கள் செயலாளர்கள், அரச அதிகாரிகள் அழைக்கப்பட்டிருந்தார்கள். அந்தக் கூட்டத்திற்கு நான் போயிருந்த போதும் ஆங்கில மொழியிலும் சிங்கள மொழியிலுமே கூட்டத்திற்கான பேச்சுக்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

"எனக்கு ஆங்கிலம் தெரியாது. தமிழ் மொழியில் மொழி மாற்றம் செய்வதற்கான ஏற்பாடு செய்து தரவேண்டும் - என்று நான் கேட்டபோது, செய்கின்றோம் - பார்ப்போம் என்று சொன்னார்கள். ஆனால், அதன் பின்னர் ஒரு மணி நேரம் அங்கே இருந்த போதும் எந்த விதமான மொழி மாற்றத்திற்கான ஆயத்தங்களும் நடைபெறவில்லை.

இதனால் இந்த விடயங்களை என்னால் கிரகித்து பதில் சொல்ல முடியாது என்று சொன்னேன். எத்தனையோ ஆயிரம் பேர் இந்த மண்ணில் இறந்ததற்கு அடிப்படை மொழி ரீதியான பிரச்னையே ஆகும். இதனாலேயே மாகாண சபை முறைமை தோன்றியது. நூற்றுக்கு நூறு வீதம் தமிழர்கள் வாழும் இந்த வட மாகாணத்திலே நீங்கள் ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் பேசுவதால் எங்களால் கிரகித்து பதில் வார்த்தைகளைச் சொல்ல முடியவில்லை. ஆகவே, நான் இந்த கூட்டத்தில் இருப்பதில் பிரயோசனமில்லை என்று கருதுகிறேன் எனக் கூறிவிட்டு கூட்டத்தில் இருந்து வெளியேறுகிறேன்", என்றார். (ஐ)

## கொரோனாவுக்கு...

கம் 59 வயது பிரிவினரில் ஆண் ஒருவரும், பெண் ஒருவமாக இருவரும், 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 8 ஆண்களும், 8 பெண்களுமாக 16 பேரும் உயிரிழந்தனர்.

இந்த மரணங்களுடன் நாட்டில் கொரோனா தொற்றால் உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 661 ஆக உயர்வடைந்துள்ளது. (ஐ)

## வேலையின்மை...

புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் புதிய தரவுகள் தெரிவிக்கின்றன.

சாதாரண தரம் கல்வி கற்றவர்களில் 7.2 வீதமானவர்கள் தொழில் வாய்ப்பின்றி உள்ளனர். ஒட்டுமொத்தமாக இலங்கையில் உயர் தரம் மற்றும் பட்டப்படிப்பை நிறைவு செய்தவர்களில் 9.1 வீதமானவர்கள் தொழில் வாய்ப்பு இன்றி பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.இந்நிலையில், வடக்கு மாகாணத்தில் தொழில்வாய்ப்பின்மை பிரச்னை மேலும் உக்கிரமடைந்துள்ளது. ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகள் தொழில்வாய்ப்புகளை எதிர்பார்த்துள்ளனர்.

அரசாங்கம் அடுத்த வருடம் வேலை வாய்ப்பை வழங்காது என்று அறிவித்துள்ள நிலையில்ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகளுக்கு தொழில்வாய்ப்புகளை வழங்க முடியுமான பல தொழிற்சாலைகள் வடக்கில் தொடர்ந்தும் மூடப்பட்டுள்ளன என்றும் தெரிய வருகின்றது.

## பங்காளிகளின்...

களுக்கு அழைப்பு விடுக்கப்படுவதில்லை என சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான லங்கா சமசமாஜ கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பிரதான பங்காளி கட்சி கட்சி தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் ஏற்பாடு செய்த 'மக்கள் பேரவை' மாநாடு நேற்று கொழும்பில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பல எதிர்பார்ப்புக்களுக்கு மத்தியில் மக்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினார்கள். மக்களின் எதிர்பார்ப்பும், கூட்டணியின் எதிர்பார்ப்பும் நிறைவேற்றப்படவில்லை. அரசாங்கம் கொள்கைக்கு முரணாக செயல்படுகிறது.

கோவிட்-19 வைரஸ் தாக்கத்தை கட்டுப்படுத்தும் திட்டங்களில் சுகாதார தரப்பினரின் கருத்துக்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவில்லை. கோவிட் தொடர்பிலான கூட்டங்களுக்கு எனக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. தொற்றுநோய் தொடர்பில் சர்வதேசத்திற்கு ஆலோசனை வழங்கிய நான் புறக்கணிக்கப்பட்டேன்.

கோவிட் தாக்கத்தை தொடர்ந்து வாழ்க்கை செலவுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. கொவிட் தாக்கத்துடன் மக்கள் பொருளாதார நெருக்கடிகளையும் எதிர்க்கொள்ள வேண்டிய நெருக்கடியான சூழ்நிலை தோற்றம் பெற்றுள்ளது. கோவிட் தாக்கத்திற்கு பின்னர் பட்டினி மற்றும் ஏழ்மை உள்ளிட்ட பிரச்னைகள் சமூகத்தின் மத்தியில் தோற்றம் பெற்றுள்ளன.

பொருளாதார அபிவிருத்தி பணிகளை சற்று தாமதப்படுத்தி பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் நிலை குறித்து அக்கறை கொள்ளுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் பலமுறை எடுத்துரைத்துள்ளேன். எமது கருத்துக்களுக்கு மதிப்பளிக்கப்படவில்லை என்பதை பெரு வேதனையுடன் குறிப்பிட்டுக் கொள்கிறேன்.

ஈழநாடு
Eelanadu

# தோட்டத் தொழிலாளர்கள் நேற்று ஆர்ப்பாட்டம்

தலவாக்கலை, டிசெ. 15

தலவாக்கலைப் பெருந்தோட்டத்துக்குட்பட்ட லிந்துலை - மட்டுக்கலைத் தோட்டத்தின் சின்ன மட்டுக்கலை, பெரிய மட்டுக்கலை ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த 300 இற்கும் மேற்பட்ட தோட்டத் தொழிலாளர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மட்டுக்கலை தொழிற்சாலைக்கு முன்பாக பதாதை களையும், கறுப்புக் கொடிகளையும் ஏந்திவாறு அவர்கள் கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தொழிலாளர்களுக்குத் தோட்ட நிர்வாகம் பல்வேறு பிரச்சினைகளை ஏற்படுத்துவதாகவும், தேயிலை மலைகள் காடாகி கிடப்பதாகவும், கொழுந்து விளைச்சல் குறைவாக உள்ள நிலையில் தோட்ட நிர்வாகம் ஒரு நாள் சம்பளத்துக்கு 20 கிலோ தேயிலையைக் கட்டாயமாகப் பறிக்க வேண்டும் என்று அழுத்தம் கொடுத்து வருவதாகவும், தோட்ட அதிகாரி முறையாகத் தோட்டத்தை வழி நடத்தவில்லை எனவும் தெரிவித்து தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

காலை 8 மணி முதல் பகல் 11 மணிவரை இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் கூட்டு ஒப்பந்தம் இல்லாத காரணத்தால் பல சிரமங்களை எதிர் நோக்குவதாகவும், கூட்டு ஒப்பந்தம் மீண்டும் வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டனர். (இ)




## மரண அறிவித்தல்

மலர்வு 13 - 03 - 1932



உதிர்வு 12 - 12 - 2021

### திருமதி இராஜேஸ்வரி வேலும்மயிலும்

யாழ். கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், கனடா Scarborough வை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜேஸ்வரி வேலும்மயிலும் அவர்கள் 12.12.2021 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - இலங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - சின்னாச்சி தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வேலும்மயிலும் அவர்களின் அன்பு மனைவியும், தணிகாசேகரன் (ராசா), கதிர்காமசேகரன் (கண்ணன்), கமலவேணி (கமலி), உதயசேகரன் (உதயன்), சந்திரவேணி (சந்திரா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பத்மரோகிணி (ரோகிணி), குலநிதி (குலம்), சத்தீஸ்வரன் (ரஞ்சன்), மகாரதி(ரதி), விஜயகுமார் (விஜயன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி பொன்னுத்துரை, தேவராஜா, ஞானேஸ்வரி தர்மராஜா ஆகியோரின் பாச மிகு சகோதரியும், காலஞ்சென்ற துஷாந் மற்றும் ஸஹானா, ரோஷாந், மைதா, நதீபன், நிலக்ஷன், ஞவீஷா, யதூஷன், விதூஷன், கரணி, லாரணி, கவி ஷன், வினோஜன், ஜெனிஷா ஆகியோரின் அன்புப் பேத்தியும்,கைரா அவர்களின் அன்புப் பூட்டியும் ஆவார்.

*பார்வைக்கு*
Wednesday, 15 Dec 2021 6:00 PM - 9:00 PM
Thursday, 16 Dec 2021 2:00 PM - 2:30 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

*கிரியை*
Thursday, 16 Dec 2021 2:30 PM - 4:00 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

*தகனம்*
Thursday, 16 Dec 2021 4:30 PM
Highland Hills Crematorium 12492 Woodbine Avenue, Gormley, Ontario, L0H 1G0, Canada

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தொடர்புகளுக்கு:*
**கண்ணன் - மகன்**
Mobile : +16477170633

*தகவல்:*
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

மலர்வு 20 - 01 - 1954



உதிர்வு 12 - 12 - 2021

### சின்னத்துரை மகாதேவன்

யாழ். தண்ணீர்த்தாழ்வு கட்டுவனைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனி Kassel ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை மகாதேவன் அவர்கள் 12.12.2021 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - ஆசைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற முருகையா - பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும்,சாந்தகுமாரி(சைலா) அவர்களின் பாசமிகு கணவரும்,ஜெனித்தா(ஜேர்மனி), ஜெகாணி(ஜேர்மனி), ஜெயானா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயபாலன்(சுவிஸ்) அவர்களின் அன்புச் சிறிய தந்தையும், நிதர்சன் அவர்களின் அன்பு மாமனாரும், பாலச்சந்திரன்(உரும்பிராய்), காலஞ்சென்றவர்களான இராமச்சந்திரன்(டென்மார்க்), சர்வானந்தன் (கிளி) மற்றும் அகிலகுமாரி (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், ரவீந்திரன்(இலங்கை). தயாநிதி(இலங்கை), காண்டீபன் (சவுதி), முரளீஸ்வரன்(டோகா), பூலோகசிங்கம் (சுவிஸ்), ஜெயகுமார்(ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

*கிரியை*
Friday, 17 Dec 2021 9:00 AM - 11:30 AM
Friedhof Heckershausen Harleshäuser Str. 22, 34292 Ahnatal, Germany

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தொடர்புகளுக்கு:*
**நிதர்சன் - மருமகன்**
Mobile : +491752086188

*தகவல்:*
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

மலர்வு 16 - 09 - 1945



உதிர்வு 12 - 12 - 2021

### பூலோகசுந்தரநாதன் செல்லையா

யாழ். உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், கனடா Scarborough வை வசிப்பிடமாகவும் கொண்ட பூலோகசுந்தரநாதன் செல்லையா அவர்கள் 12.12.2021 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா-சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும், இராசையா - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், தங்கராணி அவர்களின் அன்புக் கணவரும், கபீர்(கோபி), தனதீபன் (துங்கன்), தவசந்திரன்(மதன்), பனுஷா, கிருத்திகா ஆகியோரின் அன்புத் தந்தையும்,காலஞ்சென்றவர்களான பூலோகசுந்தரதேவி, சந்திரதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும், நஸ்ரின், றுயிக்கா, ஆயிலி, மகிந்தன், கஜன் ஆகியோரின் அன்பு மாமனாரும்,நவீன், சினேகா, ஆரியன், அமைரா, ஜேரன், கைலன், சாதித்யன், ரமீரா, டிவேஷ், ஷாயன், செயானா, செயன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

*பார்வைக்கு*
Tuesday, 14 Dec 2021 6:00 PM - 9:00 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

*கிரியை*
Thursday, 16 Dec 2021 8:30 AM - 10:30 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

*தகனம்*
Thursday, 16 Dec 2021 11:00 AM
Highland Hills Funeral Home & Cemetery 12492 Woodbine Ave, Gormley, ON L0H 1G0, Canada

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தொடர்புகளுக்கு:*
**கஜன் - மருமகன்**
Mobile : +16472005478

*தகவல்:*
**குடும்பத்தினர்.**







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 15.12.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்
7.15 மணி : கதை வழி அறமொழி
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர்நாடகம்
11.00 மணி : கலக்கல் ஸ்ரார் (மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-மனம் கொத்திப்பறவை,ராட்சசி திரைப்படங்களின் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : டொப் 10 மூவீஸ்-புதிய 10 திரைப்படங்களின் தரவரிசை

**இரவு**
7.00 மணி : பாரதீ - கஜிதா - ஆங்கிலபாட ஆசிரியர்



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : துறைக்கு அப்பால்-சி.ராஜேஸ்வரன் (கட்டடக்கலைஞர்)



9.30 மணி: பத்துக்கு 10
10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.00 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : இந்த வார புனிதர் (யாழ்ப்பாணம் திங்கள்)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லாமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு